




# தினக்குரல்

யாழ்

තිනක්කුරල්

THINAKKURAL

AN INDEPENDENT DAILY VOICE IN TAMIL

Registered in the Department of Posts of Sri Lanka under No QD/149/NEWS/2021 www.thinakkural.lk yarlthinakkural@gmail.com








ஓசை : 020 குரல் : 275 செவ்வாய்க்கிழமை 14 டிசம்பர் Tuesday 14th December 2021. Post Box: 30 Phone: 021-7388301 Fax:021-7388304 விலை 30/= பக்கங்கள் : 12


## நாளை வடக்கு வருகிறார் இலங்கைக்கான சீன தூதுவர்

சீனாவின் இலங்கைக்கான தூதுவர் கீ சென்ஹொங் நாளை புதன்கிழமை வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்

சீனத் தூதரகத்தினால் யாழ்ப்பாணம், மன்னார் மாவட்ட மீனவர்களிற்கு வியாழக் கிழமை நிவாரணப் பொருட்கள் » பக்கம் 02

## யாழ். மாநகர சபை ஆட்சி கவிழ்ந்து நிர்வாகம் ஆணையாளர் வசமாகுமா?

### -பாதீட்டை தோற்கடிக்க சிலர் சதி; நிறைவேற்ற தீவிர முயற்சி -




யாழ்.மாநகர சபையின் 2022ஆம் ஆண்டுக்கான பாதீடு அடுத்த வாரம் யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணனால் சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் இதனைத் தோற்கடித்து மணிவண்ணனிடம் இருந்து முதல்வர் பதவியை பறிக்க கட்சி ஒன்றின் சில நகர சபை உறுப்பினர்கள் திட்டமிட்டு அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

யாழ்.நகரில் உள்ள கட்சி அலுவலகம் ஒன்றில் அக்கட்சியின் மாநகர சபை உறுப்பினர்கள் ஒன்றுகூடி கட்சித் தலைமையுடன் இது குறித்து ஆராய்ந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதன்போது பாதீட்டுக்கு ஆதரவு தெரிவிப்பதா ? » பக்கம் 02

## சட்டத்திற்கு அமைவாகவே கூட்டத்தொடர் ஒத்திவைப்பு

### தேவையற்ற அச்சம் வேண்டாம்; பீரிஸ்

க.பிரசன்னா



சட்ட ரீதியாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாகவே பாராளுமன்ற கூட்டத்தொடரை ஒத்திவைக்கும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதியினால் வெளியிடப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த தீர்மானம் அரசியலமைக்குட்பட்டது. » பக்கம் 02

# பாராளுமன்றம் முடக்கம் ஜனாதிபதி சிங்கப்பூர் பயணம்

## -ஜனவரி 18 இல் புதிய கூட்டத்தொடர் ஆரம்பம்

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஒரு வாரத்துக்கு பாராளுமன்றத்தை ஒத்திவைத்த பின்னர் , சிங்கப்பூருக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

வெள்ளிக்கிழமையன்று அமர்வுகள் முடிவடைந்திருந்தநிலையில் பாராளுமன்றம் ஜனவரி 11ஆம் திகதி கூடுவதாக இருந்தது. இப்போது சபை ஜனவரி 18ஆம் திகதி கூடவுள்ளது.

ஜனாதிபதி ராஜபக்ச, டிசம்பர் 12 திகதியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சபையை இடைநிறுத்தியுள்ளார்.

இந்த பிரகடனத்தின் மூலம் 2022 டிசம்பர் 12-ஆம் திகதி நள்ளிரவில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கிறேன். » பக்கம் 02



e Gazette of the Democratic Socialist Republic of Sri

EXTRAORDINARY

PART I : SECTION (I) — GENERAL

Proclamations & C., by the President

PROCLAMATION BY HIS EXCELLENCY THE PRESIDENT



## பாராளுமன்ற இடைநிறுத்தத்தால் மேலும் நிச்சயமற்ற நிலை ஏற்படும்

### எதிர்க்கட்சி எச்சரிக்கை



நாடு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் பாராளுமன்றத்தை இடை நிறுத்துவதன் ஊடாக மேலும் நிச்சயமற்ற நிலைமைகள் ஏற்படுமென நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எச்சரித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பாராளுமன்றத்தை இடைநிறுத்தி ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவினால் » பக்கம் 02

## 60 கர்ப்பிணித் தாய்மார் ,89 சிறுவர்கள் மூன்றாவது அலையில் உயிரிழப்பு

க.பிரசன்னா



கொவிட் தொற்றின் மூன்றாவது அலையினால் 60 கர்ப்பிணித் தாய்மார்களும் 18 வயதுக்குட்பட்ட 89 சிறுவர்களும் உயிரிழந்துள்ளதாக குடும்ப சுகாதார பணியகத்தின் பணிப்பாளர் வைத்தியர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்துள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்களும் பூஸ்டர் » பக்கம் 02

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை தரமிறக்க முயற்சி

### - சர்வதேச உரிமைகள் அமைப்பு தயாராகிறது




ஒக்ரோபரில் நடந்த அதன் மெய்நிகர் அமர்வில், தேசிய மனித உரிமை நிறுவனங்களின் உலகளாவிய கூட்டணியின் அங்கீகாரத்திற்கான துணைக்குழு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவை கட்டமைப்பு ரீதியான குறைபாடுகள் மற்றும் திருப்தியற்ற செயல்திறன் தொடர்பாக பி அந்தஸ்துக்கு தரமிறக்க பரிந்துரைத்திருக்கிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு » பக்கம் 02

## இலங்கைக்கு உதவ அவசரமாக 'பொதி' தயாரிக்கிறது இந்தியா



இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தணி ப்பதற்கான நடவடிக்கைகளில் கவனம் செலுத்தும் விதத்தில் நிதியமைச்சர் பசில் ராஜபக்சவின் புதுடில்லி விஜயத்தைத் தொடர்ந்து, கொழும்புக்கு உதவுவதற்காக அவசர அடிப்படையில் பொதியொன்றை இந்தியா தயாரித்து வருகிறது என்று த எக்கனாமிக் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியா அவசர அடிப்படையில் இலங்கைக்கு உணவு மற்றும் சுகாதாரப் » பக்கம் 02

## 12 முதல் 15 வயது சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசி வழங்க ஒப்புதல்

க.பிரசன்னா



நாட்டில் 12 தொடக்கம் 15 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு பைசர் தடுப்பூசியின் ஒரு டோஸ் வழங்குவதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி தொடர்பான நிபுணர்கள் குழுவினால் இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. » பக்கம் 02

## சாணக்கியர்களுக்கு தமிழ் மக்களின் அரசியல் தொடர்பில் தெளிவு வேண்டும்

### -சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து



இலங்கை அரசியல் யாப்பின் 13-ஆவது திருத்தம் குறித்து தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் பட்டம் வழங்கிக்கொள்பவர்கள் அதற்கு முன்னுக்குப் பின் முரணான கருத்துகளைத் தெரிவித்துக்கொண்டிருப்பதாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர்களுக்கு தமிழர்களின் இன்றைய யதார்த்த நிலை புரியவேண்டுமென்பதுடன், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் குறித்தும் தெளிவு வேண்டும் என்றும் தனது அறிக்கையின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கை அரசாங்கத்தின் » பக்கம் 02

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் திருப்தியில்லை

### -காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் புறக்கணிப்பு



காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தமக்கும் திருப்தியில்லையென தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களில் ஒரு பகுதியினர் நேற்று புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திற்கு நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி » பக்கம் 03

## இராணுவம் பிடித்த 3 பிள்ளைகளை; 30 வருடங்கள் தேடியலையும் தந்தை



மண்டைதீவில் வைத்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட எனது மூன்று ஆண் பிள்ளைகளையும் 30 வருடங்களுக்கு மேலாக தேடிக்கொண்டிருக்கிறேன். இதுவரை தகவல் கிடைக்கவில்லை என யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு அதிகாரிகள் முன் தந்தை ஒருவர் உருக்கமாக தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் » பக்கம் 02




## 60 கர்ப்பிணித் தாய்மார் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள முடியும். கர்ப்பகாலத்துக்கு முன்னர் அல்லது கர்ப்பகாலத்தில் சினோபார்ம் அல்லது வேறு தடுப்பூசிகளின் இரு அளவுகளையும் பெற்றிருந்தால் கர்ப்ப காலத்துக்குப் பின்னர் பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள முடியும்.

மூன்றாவது கோவிட் அலையில் 60 கர்ப்பிணித் தாய்மார்களும், 18 வயதுக்குட்பட்ட 89 சிறுவர்கள் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் இதுவரை கொவிட் தொற்றினால் 14,614 பேர் மரணித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. 2020 டிசம்பர் மாதம் இறுதி வரை இலங்கையில் 204 கொவிட் மரணங்களே பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் 2021 ஆம் ஆண்டு 14410 கொவிட் மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## பாராளுமன்ற... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின்பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க கூறுகையில்,

எந்த காரணியை மையப்படுத்தி பாராளுமன்றத்தை இடைநிறுத்தி ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவினால் விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது என்பது தொடர்பில் தெளிவுப்படுத்தப்படவில்லை.

நாடு தற்போது பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில் பாராளுமன்றத்தை இடை நிறுத்துவதன் ஊடாக மேலும் நிச்சயமற்ற நிலைமைகள் ஏற்படும். எனவே பாராளுமன்றத்தை இடைநிறுத்தியதற்கான உண்மைக்காரணம் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

## பாராளுமன்றம் முடக்கம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் 2022 ஜனவரி 18-ஆம் திகதி முற்பகல்10 மணிக்கு அடுத்த அமர்வு தொடங்குவதற்கு நிர்ணயித்து பாராளுமன்றத்தை கூட்டுகிறேன் என்று வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தை ஒத்திவைத்த சில மணித்தியாலத்துக்கு பின்னர் ஜனாதிபதி சிங்கப்பூருக்கு சென்றுள்ளார். மருத்துவ நோக்கங்களுக்காக அவர் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டுள்ளதாகநம்பப்படுவதாக ஜனாதிபதி அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, நேற்று திங்கட்கிழமை அமைச்சரவைக் கூட்டத்தின் போது விவாதிக்கப்படவிருந்த இரண்டு முக்கிய விடயங்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாதென எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கடுமையான வெளிநாட்டு நாணய நெருக்கடியைக் கருத்தில் கொண்டு சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மீட்பு பொதிக்கு இலங்கை செல்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்படவிருந்தது.

இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு ஒரு மாத இறக்குமதிக்கு மட்டுமே போதுமானதாக தாழ்ந்த மட்டத்திற்கு சென்றுள்ளது. அரசாங்கத்தின் பங்காளிகள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்திவரும் அமெரிக்க மின் நிறுவனத்துடனான சர்ச்சைக்குரிய ஒப்பந்தம் குறித்தும் அமைச்சரவை விவாதிக்க திட்டமிடப்பட்டிருந்தது .

இது இவ்வாறிருக்க ஜனாதிபதி பாராளுமன்றத்தை ஒத்திவைத்திருப்பதால் பாராளுமன்றத்தில் உள்ள சகல நிலையியல் குழுக்களும் மீள அமைக்கப்பட்டு மீண்டும் கூட்டப்பட வேண்டும்

பொது நிறுவனங்கள் மற்றும் பொதுக் கணக்குகள் தொடர்பான இரண்டு மேற்பார்வைக் குழுக்கள் அரச நிறுவனங்களை நிர்வகிப்பது தொடர்பாக பல முறைகேடுகளை சுட்டிக்காட்டி வருகின்றன.

பாராளுமன் றத்தின் கூட்டத்தொடரின் திகதிகள் , நேரங்கள் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளி ன் தலைவர்களால் சபாநாயகரின்இணக்கப்பாட்டுக்கு ஏற்பநிர்ணயிக்கப்படுகிறது. எவ்வாறாயினும், அரசியலமைப்பின் 70 ஆவது பிரிவின் கீழ் பாராளுமன்றத்தை ஒத்திவைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

ஒத்திவைப்பின்போது, சபாநாயகர் தொடர்ந்து செயற்படுவதுடன், பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளாவிட்டாலும் உறுப்பினர்கள் உறுப்புரிமையை கொண்டிருப்பர் .

.அரசியலமைப்பின் 33ஆம் உறுப்புரைக்கு அமைய பாராளுமன்றத்தின் ஒருகூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கும்போது ஜனாதிபதி பாராளுமன்றத்தை வைபவ ரீதியாக ஆரம்பித்துவைத்து, அக்கிராசனத்தை ஏற்று அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. பாராளுமன்றக் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்படும் போது பாராளுமன்றத்தினால் முறையாக பரிசீலனை செய்யப்படாத வினாக்கள் மற்றும்பிரேரணைகள் இரத்தாவதுடன், பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் அவை தொடர்பில் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் பாராளுமன்ற உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் விசேட குழுக்கள் (தெரிவுக் குழு) தவிர்ந்த ஏனைய குழுக்கள் புதிய கூட்டத்தொடரில் மீண்டும் புதிதாக நியமிக்கப்பட வேண்டும்.

இதற்கமைய கடந்த 09ஆம் திகதி பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில்தீர்மானிக்கப்பட்டமைக்கு அமைய ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வுஇடம்பெறாது என்பதுடன், ஜனவரி 18ஆம் திகதி புத்தாண்டுக்கான பாராளுமன்ற

## நாளை ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கப்படவுள்ள நிலையிலேயே அதில் கலந்து கொள்வதற்காக சீனத் தூதுவர்நாளை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சீன தூதுவருக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நாளை புதன்கிழமை இரவு உணவு விருந்து வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மறுநாள் 16ஆம் திகதி யாழில் 800 மீனவர்களிற்கு வலைகள் வழங்கப்படுவதோடு 2 ஆயிரம் மீனவர்களிற்கு நிவாரணப் பொதிகளும் வழங்கப்படவுள்ளதாகவும், இதேநேரம் மன்னார் மாவட்ட மீனவர்களில் 700 பேருக்கு நிவாரணப் பொதிகளும் 150 பேருக்கு வலைகளும் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்கான ஏற்பாடுகளை மீன்பிடி அமைச்சு ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இலங்கைக்கான சீன மக்கள் குடியரசின் தூதுவர் கீ சென்ஹொங் வடமாகாணத்திற்கு இரு நாள் விஜயம் மேற்கொள்ளவுள்ளதை சீன தூதரகமு ம் உறுதிப்படுத்தியுள்ளது.

## இலங்கை மனித ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது ஏ அந்தஸ்தைப் பெற்றுள்ளது. இருப்பினும், தரமிறக்குதல் 2022 இல் ஒரு வருடத்திற்குப் பிறகு நடைமுறைக்கு வராது என்று துணைக் குழு தெளிவுபடுத்தியுள்ளது. எவ்வாறாயினும் இடைக்காலமாக, மனித உரிமைகள்

ஆணைக்குழுவானது பாரிஸ் கோட்பாடுகளுடன் தொடர்ந்தும் இணக்கமாக இருப்பதை உறுதிப்படுத்த தேவையான ஆவணரீதியான ஆதாரங்களை வழங்குவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது.

2021பெப்ரவரியில் ஆணைக்குழுவின் குறைபாடுள்ள நியமன செயல்முறை, இலங்கை மனிதஉ ரிமைகள் ஆணைக்குழுவின் உறுப்பினர் மற்றும் அலுவலர்களில் பன்மைத்தன்மையின்மை . அதன் மனித உரிமை ஆணையை நிறைவேற்றுவதில் அதன் பயனற்ற தன்மை குறித்து சிவில் சமூக அமைப்புகளிடமிருந்து கடிதப் பரிமாற்றங்களைப் பெற்றதாக உப குழு கூறியுள்ளது.

## சாணக்கியர்களுக்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ச்சியான இன ஒடுக்குமுறைகளும், அழிப்புகளும் தமிழ் இளைஞர்களை ஒரு தற்காப்பு நிலைக்குத் தூண்டியது. இதன் காரணமாக, பல்வேறுபட்ட ஆயுத அமைப்புகள் தோற்றம் பெற்று, தமிழின விடுதலைக்காக போராடின.

இந்த வரலாற்றைப் புரிந்து கொள்ளாதவர்கள் அல்லது புரிந்துகொள்ள விருப்பமில்லாதவர்கள், தங்களுக்குத் தாங்களே சாணக்கியர்கள் என்று ஒருவருக்கொருவர் பட்டம் சூட்டிக்கொண்டும் புகழாரம் சூட்டிக்கொண்டும் தவறான கருத்துகளையும் அணுகுமுறைகளையும் தமிழ் மக்கள் மத்தியில் விதைக்க முயற்சிக்கின்றனர். பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும்படி சில கட்சித் தலைவர்கள் பேசுவதாகவும் மகிந்த ராஜபக்சேவே பதின்மூன்றாவது திருத்தத்திற்கு மேலே சென்று இந்த பிரச்சினையைத் தீர்ப்பேனென்று பலமுறை கூறியதாகவும் ஆனால் அவற்றையெல்லாம் மறந்துபோன சில தமிழ்த் தலைமைகள் பதின்மூன்றை நிறைவேற்றும்படி இப்பொழுது கோரிக்கைகளை முன்வைப்பது என்பது தமிழருக்குச் செய்யும் துரோகம்' என்றும் இந்த சாணக்கியர்கள் 11.12.2021 அன்று சுன்னாகத்தில் நடந்த சாணக்கியர்களின் கலந்துரையாடல் கூட்டத்தில் கூறியுள்ளனர். இதே விடயத்தை இவர்கள் இலண்டனிலும் தெரிவித்திருந்தனர். மாகாணசபைகளுக்கு அரசியல் சாசன ரீதியில் வழங்கப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்திக்கொண்டு அதன் பிறகு சமஷ்டியை நோக்கி முன்னேற வேண்டும் என்பதே தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகக் குரல்கொடுக்கும் அரசியல் தலைமைகளின் இன்றைய நிலை. ஆனால் அரசாங்கம் அதனையே நடைமுறைப்படுத்த முடியாதென பிடிவாதம் பிடிக்கிறது.

இந்த நிலையில் இந்த சாணக்கியர்களும் பதின்மூன்றை ஏற்கமாட்டோம் என்று கூறுவது இவர்கள் யாருடைய நிகழ்ச்சிநிரலை நடைமுறைப்படுத்த முயற்சிக்கின்றனர் என்ற கேள்வியை எழுப்புகிறது.விடுதலைப் புலிகள் பதின்மூன்றாவது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் அதற்குப் பின்னர் நடந்த யுத்தத்தில் ஒருஇலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டார்கள் என்றும் ஆயுதப் போராட்டத்தை ஏற்காத நீங்களே இப்பொழுது அவர்களைத் துணைக்கு அழைக்கிறீர்கள்.

ஒரு இலட்சம்பேர் கொல்லப்பட்டதாகச் சொல்லும் நீங்கள் ஒரு இனவழிப்பு நடந்ததாகச் சொல்ல முடியாதென்றும் சொல்கிறீர்கள்.

இந்த சாணக்கியர்கள் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவை மேவி வேறு எந்தவொரு நாடும் தலையிடாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். வரவிருக்கின்ற புதிய அரசியல் சாசனத்தில் பதின்மூன்றை முற்றாகவே நீக்கப்படலாம் என்ற அச்சம் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.

ஆகவே எமக்குக் கிடைத்த அதிகாரங்களை விட்டுக்கொடுப்பது என்ற முட்டாள்தனத்தை நாங்கள் செய்ய இயலாது. செய்யக்கூடாது.

கிடைப்பதைப் பெற்றுக் கொண்டு அடுத்த கட்டத்திற்கு முன்னேறிச் செல்ல வேண்டும் என்று இதுவரை காலமும் கூறி, மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியிட்டு வந்த இந்த சாணக்கியர்கள் இப்பொழுது அரசியல் யாப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள பதிமூன்றாவது திருத்தத்தை ஏற்க மாட்டோம் என்று கூறுவது இவர்களது சுயமுரணைக் காட்டுகிறது. இவர்களின் செயற்பாடுகள் இவர்கள் அரசாங்கத்தின் நிகழ்ச்சிநிரலையும் சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனாவாதிகளின் நிகழ்ச்சிநிரலையும் முன்னெடுத்துச் செல்லும் தரகர்களாகவே முன்னிலைப்படுத்தியிருக்கிறது. எனவே எமது மக்கள் இத்தகைய அரசியல் தரகர்களிடம் விழிப்புடன் செயற்பட்டு எமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

## யாழ்.மாநகர ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லையா ? என்பது தொடர்பில் காரசாரமான விவாதம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சில உறுப்பினர்கள் மணிவண்ணன் தரப்பு தொடர்ந்து ஆட்சியில் இருந்தால், எங்களது அரசியல் இருப்பு கேள்விக்கு உள்ளாகும். எனவே பாதீட்டுக்கு ஆதரவு வழங்க கூடாது என கருத்துக்களை முன் வைத்துள்ளனர்.

எனினும் சில உறுப்பினர்கள் யாழ்.மாநகர சபை ஊடாக தற்போது பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள், அபிவிருத்தித் திட்டங்கள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அதனைக் குழப்புவது மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தும் எனவும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனையடுத்து மீண்டும் கூடி ஆராய்வதெனக் கூறி அந்தக் கட்சிக் கூட்டம் எந்த முடிவும் இன்றி ஒத்தி வைக்கப்பட்டதாகவும் உட்கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, யாழ். மாநகர சபை பாதீடு கடந்த வருடம் தோற்கடிக்கப்பட்டு புதிய முதல்வர் தெரிவு செய்யப்பட்டார். இந்நிலையில் இம்முறையும் பாதீடு தோற்கடிக்கப்பட்டால் சபை கலைந்து நிர்வாகம் ஆணையாளர் வசம் செல்லும் சூழ்நிலை உருவாகும் சாத்தியம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே இந்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட யாழ்.கலாசார மத்திய நிலையத்தை மத்திய அரசு வசம் கொண்டு வர மத்தியில் இருந்து முன்னர் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டது. இதற்கு முதல்வர் மணிவண்ணன் தரப்பு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

இந்நிலையில் மாநகர சபை ஆட்சி கவிழ்ந்தால் அதிகாரம் நேரடியாக மத்தி வசம் செல்லும். அதன் பின்னர் மத்திய அரசு நினைத்ததை சாதித்துக்கொள்ளும். இதற்கு தமிழ்த் தரப்புக்களே துணை போகுமா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன. (ச)

## இராணுவம் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியங்களை பதிவு செய்யும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் . 1990ஆம் ஆண்டு மண்டதீவில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது எனது மூன்று மகன்களும் கைது செய்யப்பட்டனர். பின்னர் அவர்களில் இருவரை விடுவித்தனர்.

மூன்று நாட்கள் கடந்து மீண்டும் ஒரு சுற்றிவளைப்பின் போது ஏற்கனவே விடுவிக்கப்பட்ட எனது இரு மகன்களையும் மீண்டும் இராணுவத்தினர் கொண்டு சென்றனர். மண்டதீவு இராணுவ முகாமுக்குச் சென்று எனது பிள்ளைகளை ஏன் கைது செய்தீர்கள்? அவர்களை விடுவியுங்கள் எனக் கேட்டேன். அவர்கள் சிரமதானம் செய்கிறார்கள். விரைவில் விடுவிப்போம் என இராணுவத்தினர் தெரிவித்தனர். எனினும் இன்று வரை எனது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. பல்வேறு தரப்பினரிடமும் முறைபாடுகளை வழங்கியும் இதுவரை எந்தப் பயனும் இல்லை எனவும் அவர் கண்ணீரோடு கூறினார். எனது மூத்த மகன் கைது செய்யப்படும்போது பல்கலைக்கழகத்துக்கு மேற்படிப்புக்காக தெரிவாகியிருந்தார். ஏனைய இருவரும் பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்தார்கள். இனியேனும் எனது பிள்ளைகள் எங்கு உள்ளார்கள்? அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது? என எனக்குத் தெரிய வேண்டும். அதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு உதவ வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார். (ச-75)

## சட்டத்திற்கு ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே தேவையற்ற அச்சத்தினை ஏற்படுத்த வேண்டாம். பாராளுமன்றத்தை கூட்டவும், கலைக்கவும் மற்றும் ஒத்திவைக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு.

பாராளுமன்றத்தை ஒத்திவைப்பது தொடர்பாக அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அவரது அதிகாரத்திற்கு ஒரே ஒரு வரம்பு மட்டுமே இருக்கின்றது. பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் தொடங்கும் திகதியை அறிவிக்க வேண்டும். வரவு - செலவுத்திட்ட விவாதங்கள் நிறைவடைந்துள்ளமையினால் ஜனாதிபதிக்கு நேரடியாக வழங்கப்பட்டுள்ள இந்த அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இது பொருத்தமான தருணமாகும்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமானதும் தற்போதுள்ள அனைத்து குழுக்களும் செயற்படும். இந்தக் குழுக்களின் அமைப்பிலேயே மாற்றங்கள் ஏற்படுவது சாத்தியமாகவிருக்கின்றது. அமைப்பில் மாற்றம் ஏற்படுவது இயற்கையானது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெறுவது தொடர்பில் வெளியிடப்படும் சகல செய்திகளும் பொய் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 12 முதல் ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸையும் பெற்றுக்கொண்ட 20 வயதுக்கும் மேற்பட்ட எவரும் பூஸ்டர் தடுப்பூசியினை அருகிலுள்ள தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ள முடியும். பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியே வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கையில் கொரோனா தணிப்பு செயல்திட்டத்தின் கீழ் 1.3 மில்லியனுக்கும் அதிகமானோர் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டுள்ளனர். பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக்கொண்ட பின்னரும் உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றிச் செயற்பட வேண்டுமென சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

கோவிட் தடுப்பூசியின் இரண்டு அளவுகளையும் பெற்றதன் பின்னரும் தற்போது தடுப்பூசிகளின் செயற்திறன் குறைவடைந்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளமையின் காரணமாகவே மூன்று மாதங்கள் கடந்த பின்னர் பூஸ்டர் தடுப்பூசி வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.இதேவேளை நாட்டில் தற்போது 30 வயதுக்கும் மேற்பட்ட சகலருக்கும் பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 60 வயதுக்கும் மேற்பட்ட 67 ஆயிரம் நபர்கள் கொவிட் தடுப்பூசியின் ஒரு டோஸை கூட பெற்றுக்கொள்ளவில்லை என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

## இலங்கைக்கு உதவ ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புப் பொதியை இந்தியா விரிவுபடுத்தும் என எதிர்பார்க்கப்படுவதாகஅதிகாரிகளை மேற்கோள்காட்டி அப்பத்திரிகை மேலும் குறிப்பிட்டுள்ளது. இவற்றுடன் சக்தி பாதுகாப்புப் பொதி , நாணயப் பரிமாற்றம், இந்திய முதலீடுகளை ஊக்குவித்தல் என்பனவும் உள்ளடங்குகின்றன.

இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான நடைமுறைகள் பரஸ்பரம் இணங்கிக் கொள்ளப்பட்ட காலத்திற்குள் முன்கூட்டியேநிறைவு செய்யப்படும் என்று நிதி அமைச்சரின் விஜயத்தின் போது இணங்கிக் கொள்ளப்பட்டது. உணவு மற்றும் சுகாதாரப் பாதுகாப்புப் பொதியானது, இந்தியாவில் இருந்து உணவு, மருந்துகள் மற்றும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் நீடிப்பை கொண்டதாகும்.

எரிசக்திப் பொதியானது, இந்தியாவில் இருந்து எரிபொருள் இறக்குமதியை ஈடுசெய்வதற்கான கடன் நீடிப்பையும் , திருகோணமலை எண்ணெய்க் குதப் பண்ணையின் ஆரம்பகட்ட நவீனமயப்படுத் தலையும் உள்ளடக்கும். இலங்கையின் தற்போதைய சென்மதி நிலுவை பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய உதவுவதற்காக நாணய பரிவர்த்தனையை வழங்குவதற்கான சலுகையும் அதில் உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அபிவிருத்தி , வேலைவாய்ப்பை விரிவுபடுத்துவதற்கு பங்களிக்கும் பல்வேறு துறைகளில் இந்திய முதலீடுகளை இலங்கையில்இலகுபடுத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. நிதியமைச்சர் பசில் ராஜபக்ச , இந்தியநிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஆகியோர் நேரடித் தொடர்புகளை ஆரம்பிக்கவும் , பொதி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வகையில் ஒருவருக்கொருவர் நேரடியாகவும் கிரமமாகவும் தொடர்பு கொள்ளவும் இணங்கியுள்ளனர்

நிதியமைச்சர் பசில் ராஜபக்ச , இலங்கையின் பொருளாதார நிலை மற்றும் கொவிட்க்கு பின்னரான சவால்களை எதிர்கொள்வதற்கான தனது அரசாங்கத்தின் அணுகுமுறை குறித்து இந்திய தரப்புக்கு விளக்கமளித்திருந்தார் .

இரண்டு நாள் பயணத்தின் போது, அமைச்சர் பசில் ராஜபக்ச , நிர்மலா சீதாராமன் மற்றும் ஜெய்சங்கருடன் இரு சுற்று கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் குமார் டோவல் ஆகியோரையும் அவர் சந்தித்து பேசியிருந்தார்.

# படுகொலையாளிகள், இனவாதிகளுக்கு இலங்கையில் உயர் பதவிகள் வழங்கல்

## -அருட்தந்தை சக்திவேல் தெரிவிப்பு

இனப் படுகொலையுடன் தொடர்புடையவர்கள் உயர் பதவிகளை பெற்றுள்ளனர். அத்தோடு இனவாத கருத்துக்களை கூறி முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் தொடுக்க தூபமிட்டவர் ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அண்மையில் பாகிஸ்தானில் பிரியந்த குமார மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலும் தொடர்ந்து கொல்லப்பட்ட விதமும் நாகரீக சமூகத்தால் வெறுக்கப்படும் மிலேச்சத்தனமான பயங்கரவாத செயல் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இதனோடு சம்பந்தப்பட்டோர் கைது செய்யப்பட்டாலும் இத்தகைய கொள்கையுடையவர்கள் சமூகத்தில் திருந்தி வாழாதவரை நீதி கிடைக்கப் போவதில்லை. நீதியை பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு பாகிஸ்தான் பிரதமரால் மட்டும் முடியாது. சமய மற்றும் அரசியல், சிவில் சமூகத் தலைவர்களின் கூட்டு செயற்பாட்டால் மட்டுமே அதனை எட்டமுடியும். இதற்காக தியாக சிந்தையுடன் அர்ப்பணிப்புடன் செயற்பட அனைத்து தரப்புக்களும் இதயசுத்தியுடன் முன்வரவேண்டும்.

பிரியந்த குமாரவின் படுகொலைக்கு நீதி கேட்டு சமயத் தலைவர்களும், சட்டத்தரணிகளும் , சிவில் சமூகத்தினரும் அஞ்சலி நிகழ்வை நடத்தியதோடு அடையாள எதிர்ப்பையும் வெளிக்காட்டுகின்றமை வரவேற்கத்தக்கதே. இலங்கை ஆட்சியாளர்களும் தம் கடமைக்கு பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு இழப்பீடாக 2.5 மில்லியன் கொடுப்பதாக அறிவித்துள்ளனர்.

இலங்கையில் மிருசுவில் படுகொலையோடு தொடர்புடைய இராணுவ அதிகாரி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டுள்ளார். கொழும்பு மற்றும் பிரதேசங்களில் இளைஞர்கள் காணாமல் போனமைக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடற்படை தளபதி குற்றங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு புதிய பதவியும் பெற்றுள்ளார். இனப்படுகொலை தொடர்புடையவர்கள் உயர் பதவிகளை பெற்றுள்ளனர். அத்தோடு இனவாத கருத்துக்களை கூறி முஸ்லிம்களுக்கு எதிராக தாக்குதல் தொடுக்க தூபமிட்டவர் ஒரே நாடு ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கையில் நடந்தேறிய இன அழிப்புடனான இனப்படுகொலைக்கும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கும் நீதிகேட்டு வட கிழக்கு தமிழர்கள் நீண்ட காலமாக போராட்டம் நடத்தி வருகின்றனர். இவர்களின் நீதிக்கான குரலுக்கு செவிசாய்த்து நீதி கிட்ட செயற்பட்டால் மட்டுமே சமயத் தலைவர்கள், சட்டத்தரணிகள், சிவில் சமூகத்தினர் பிரியந்த குமாரவிற்காக எழுப்பும் நீதிக்கான குரல் உண்மையானதாகவும், நியாயமானதாகவும் அமையும்.

இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைக்கு பாகிஸ்தான் முழுமையாக ஆதரவு வழங்கிய நாடு தான். அதற்காக தற்போதைய இலங்கை ஜனாதிபதி பகிரங்கமாகவே நன்றி கூறியுள்ளார். உண்மையான நீதி என்பது கருத்து சுதந்திரம், மத சுதந்திரம் என்பவற்றோடு இனப்பன்மையை அங்கீகரித்து இனங்கள் கௌரவமாக வாழ்வதற்கான உரிமையையும் உறுதிபடுத்த வேண்டும்.

இதனையும் சர்வதேச நாடுகளும் பாகிஸ்தானும் ஏற்று இலங்கை வாழ் மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு அதனை உறுதி செய்ய வேண்டும் என்று பிரியங்க குமார் கொலைக்கு நீதி கேட்கும் காலச் சூழ்நிலை இந்தக் கோரிக்கையும் முன்வைக்கின்றோம்.

# பிரிட்டனில் முதல் ஒமிக்ரோன் மரணம்

## -உருத்திரிபு வேகமாக பரவுகிறது-

கடந்த ஆண்டு முதல் உலகளாவிய சுகாதார நெருக்கடியால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள நாடுகளிலொன்றான பிரிட்டன், கொரோனா வைரசில் இருந்து உருமாற்றம் அடைந்த ஓமிக்ரோன் தொற்றினால் ஒரு மரணத்தை அதிகாரபூர்வமாக அறிவித்த முதல் அரசாங்கம் என்று நம்பப்படுகிறது.

இதே வேளை ஒமிக்ரோன் அலை வருவதாகவும், பிரிட்டனில் தகுதிவாய்ந்த அனைவருக்கும் புத்தாண்டிற்கு முன்னதாக பூஸ்டர் டோஸ் செலுத்தப்படும் எனவும் அந்நாட்டு பிரதமர் போரிஸ்ஜோன்சன் தெரிவித்துள்ளார்

கொரோனா வைரசில் இருந்து உருமாற்றம் அடைந்த ஒமிக்ரோன் தொற்று 63 நாடுகளில் பரவியுள்ளன. டெல்டா வைரஸை விட ஒமிக்ரோன் வேகமாக பரவுவதாகவும், தடுப்பூசியின் செயல்திறனை குறைக்கும் ஆற்றலை பெற்றுள்ளதாகவும் மருத்துவ வல்லுநர்கள் கூறுகின்றனர். பிரிட்டனிலும் ஒமிக்ரோன் தொற்று வேகமாக பரவி வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை மட்டும் 1,898 பேருக்கு ஓமிக்ரோன் பரவியுள்ளது. பிரிட்டனில் இதுவரை மொத்தம் 3,137 பேருக்கு தொற்று உறுதியாகியுள்ளது. இதனால் நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இதிலிருந்து பாதுகாப்பாக இருக்க நமக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகள் போதுமானதாக இல்லை. ஆனால், பூஸ்டர் டோஸ் மூலம் நாம் அனைவரும் அதற்கான நோய் எதிர்ப்பு திறன் அளவை கொண்டு வரமுடியும் என நமது ஆராய்ச்சியாளர்கள் நம்புகிறார்கள். அதேநேரத்தில் ஒமிக்ரோனின் தீவிரம் குறைவாக இருப்பதாக கூறிவிட முடியாது. பிரிட்டனில் உள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் புத்தாண்டுக்கு முன் பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்திக் கொள்ள அனுமதி அளிக்கப்படும். என்று பிரதமர் கூறியுள்ளார்

# எரிவாயு வெடிப்பு சம்பவங்கள் நாளை அறிக்கை தயாராகும்

க.பிரசன்னா

நாட்டில் தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்ட எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை நாளை புதன்கிழமைக்குள் பூர்த்தி செய்யப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொறட்டுவ பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் சாந்த வல்பொல தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. இறுதி அறிக்கை புதன்கிழமைக்குள் நிறைவு செய்யப்படவுள்ளது. அதன் பின்னர் ஜனாதிபதியை சந்திப்பதற்கான திகதி மற்றும் நேரம் கிடைத்தவுடன் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என பேராசிரியர் சாந்த வல்பொல தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக கிட்டத்தட்ட 40 பிரிவினரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த குழுவில் எரிவாயு நிறுவனங்கள், இலங்கை தர நிர்ணய நிறுவனம், அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் மற்றும் எரிவாயு கசிவுகள் வெடித்ததாக தெரிவிக்கப்பட்ட வீடுகளில் வசிப்பவர்கள் என பலரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

இதே வேளை குண்டசாலை பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த முதலாம் திகதி ஏற்பட்ட எரிவாயு கசிவு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த பெண் கண்டி போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறும் வெடிப்புச் சம்பவங்களினால் இதுவரை இரண்டு மரணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் பலர் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். எரிவாயு கலவையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் காரணமாகவே வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதாக குறிப்பிடப்பட்ட நிலையில் புதிய எரிவாயு சிலிண்டர்களை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. எனினும் தற்போது புதிய எரிவாயு சிலிண்டர்களிலும் வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

## ஜனாதிபதி ... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆணைக்குழு அதிகாரிகள் சென்ற நிலையில் இவர்களால் தமக்கு தீர்வு கிடைக்காது. இது காலத்தை இழுத்தடித்து ஏமாற்றும் நாடகம் மட்டுமே என தெரிவித்து கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

காணாமல் போனோர் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் மற்றும்

குழுக்களின் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று கிளிநொச்சி விஜயம் மேற்கொண்டிருந்தது. இதன் போதே குறித்த ஆணைக்குழுவிலும் தமக்கு தீர்வு பெற்றுத்தர முடியாது எனவும், ஏற்கனவே அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள், காணாமல் போனோர் அலுவலகத்தினால் எவ்வித தீர்வும் எட்டப்படாத நிலையில் இந்த ஆணைக்குழுவும் எமக்கு எத்தீர்வையும் வழங்காது என தெரிவித்து காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நாங்கள் 11 வருடங்களாக ஜனாதிபதி ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட பல குழுக்களை சந்தித்து முறைப்பாடுகளை செய்துள்ளோம். காணாமல் போனோர் அலுவலகத்திற்கு முதல் கட்டமாக 5பேரின் தகவல்களை ஒப்படைத்தோம். அந்த ஐந்து பேரினது தகவல்களைக்கூட பெற்றுத்தரவில்லை. அவர்களால் தரவும் முடியவில்லை என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்கத் தலைவி கோகிலவாணி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ஆணைக்குழு அதிகாரிகள் சென்று தங்களிற்கு ஏற்றவர்களை அழைத்துச் சந்தித்து ஜெனீவாவில் விடயங்களை ஏற்பாடுகளைச் செய்து ஏமாற்றியுள்ளனர் எனவும் அவர் கூறினார்.(ச-55)

## -யாழ்.மாநகர சபை பாதீடு; த.தே.கூ.-

# பழி தீர்க்குமா? பாதுகாக்குமா?






-நெடுந்தீவு ஜெயபாலன்-

இலங்கையின் உள்ளூராட்சி சபைகளின் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடுகள் தற்போது சபைகளில் சமர்ப்பிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் யாழ்.மாநகர சபையின் தற்போதைய முதல்வர் மணிவண்ணன் சமர்ப்பிக்கும் முதலாவது பாதீட்டின் மீதான எதிர் பார்ப்பு தற்போது யாழ். மாநகர மக்கள் மத்தியில் பேசு பொருளாக மாறியுள்ளது.

இதற்கான காரணம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு மாநகர சபை உறுப்பினராக தெரிவான மணிவண்ணன் தற்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பரம எதிரியாக கணிக்கப்படுவதாகவே தமிழ் தேசிய முன்னணியினர் பலரின் பேச்சுக்கள் காணப்படுகின்றமையே காரணமாகும்.

இந்நிலையில் யாழ். மாநகர சபையின் பாதீடு கடந்து வந்த பாதையினை நோக்குவது பொருத்தமாக அமையும்.

யாழ். மாநகரசபைக்கு தேர்தல் மூலம் 45 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் நிலையில் ஆட்சியமைப்பதற்கான சாதாரண பேரத்தினை பெறுவதற்கு 23 உறுப்பினர்களின் ஆதரவு தேவையென்ற நிலையில் 2018 ஆம் ஆண்டில் இறுதியாக இடம்பெற்ற யாழ். மாநகர சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 உறுப்பினர்களையும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி 13 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. 10 ஆசனங்களையும் ஐக்கிய தேசிய கட்சி 03 உறுப்பினர்களையும் இலங்கை சுதந்திரக் கட்சி 02 உறுப்பினர்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணி 1 ஆசனத்தையும் கைப்பற்றியது.

இந்நிலையில் முதல்வர் தெரிவின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இ.ஆனொல்ட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் சி.மணிவண்ணண், ஈ.பி.டி.பியில் மு.றெமீடியஸ் ஆகியோர் மும்முனைப் போட்டியில் களமிறங்கினர்.

இந்நிலையில் 2018 முதல்வர் வேட்பாளர் தெரிவின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இ.ஆனொல்ட் - 19 வாக்குகளையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சி.மணிவண்ணண் 13 வாக்குகளையும் ஈ.பி.டி.பியில் மு.றெமீடியஸ் 13 வாக்குகளையும் பெற்றனர்.

இரண்டாவது முன்றாவது வாக்குகளை பெற்றவர்கள் ஒரெ சம அளவான வாக்குகளை பெற்றதால் திருவுளச்சீட்டு மூலம் இரண்டாவது போட்டியாளர் தெரிவின் போது ஈ.பி.டி.பியின் றெமிடியஸ் தெரிவானதையடுத்து முதல் வாக்கை பெற்ற ஆனொல்ட் மற்றும் றெமீடியஸ் ஆகியோருக்கிடையிலான போட்டி இடம்பெறும் என்று அறிவித்த நிலையில் ஈ.பி.டி.பி. போட்டியில் இருந்து விலகுவதாக அறிவித்ததால் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இ.ஆனொல்ட் முதல்வராக தெரிவானார்.

இந்நிலையில் 2019 வரவு செலவுத்திட்டம் (2020க்கானது) சமர்ப்பிக்கப்பட்டபோது மணிவண்ணண் மற்றும் ஈ.பி.டி.பி. எதிர்ப்பால் தோல்வி அடைந்தபோதும் உள்ளூராட்சி அதிகார சபை சட்டத்தில் அதனை நிறைவேற்றும் தற்துணிவு அதிகாரம் முதல்வருக்கு இருக்கும் நிலையில் அதனை நிறைவேற்றி வெற்றி கண்டார்.

இந்நிலையில் 2020 இல் 2021 ஆம் ஆண்டுக்கான பாதீவு சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் தோற்கடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் 14 நாட்கள் களித்து இரண்டாவது தடவையும் தோற்கடிக்கப்பட்டது. இதன் காரணமாக முதல்வர் பதவியை இழந்தார் இ.ஆனொல்ட்.

மீண்டும் முதல்வர் பதவிக்கான வாக்கெடுப்பு நடத்தப்பட்ட நிலையில் முன்னாள் முதல்வர் ஆனொல்ட் மற்றும் தற்போதய முதல்வர் மணிவண்ணண் ஆகியோர் முதல்வர் போட்டியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் மணிவண்ணன் 21 வாக்குகளும் ஆனொல்ட் 20 வாக்குகளும் பெற்ற நிலையில் 4 பேர் நடுநிலை வகித்ததால் மணிவண்ணண் முதல்வராக தெரிவானார்.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும் நடுநிலை வகித்தனர்.

இந்நிலையில் 2022 ஆம் ஆண்டுக்கான பாதீடு முதல்வர் மணிவண்ணண் நாளைய தினம் சமர்ப்பிக்கவுள்ள நிலையில் குறித்த பாதீடு தோற்கடிக்கப்படுமா? அல்லது வெற்றி பெறுமா? என்பதே மக்களின் கேள்வியாக உள்ளது.

இந்நிலையில் மாநகர சபை பாதீடு முதல் தடவை தோற்கடிக்கப்பட்டால் திருத்தங்களுடன் இரண்டாவது தடவை மீள சமர்ப்பிக்க முடியும்., ஆனால் இரண்டாவது தடவையும் பாதீடும் தோற்கடிக்கப்பட்டால் உள்ளூராட்சி மன்றங்களின் 2017 ஆம் அண்டு திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மூன்றாவது தடவையாக முதல்வரை தெரிவு செய்யமுடியாது.

மாறாக அச் சட்டத்தில் பாதீடு தோற்கடிக்கப்பட்ட பின்னர் மாநகர முதல்வர் பதவி இராஜினாமா செய்து கொள்வதாக அல்லது பதவி இழந்ததாக கொள்ளப்படும் நிலையில் மாநகர சபை விசேட ஆணையாளர்,அல்லது மாநகர ஆணையாளர் வசமாகக்கூடிய நிலை உருவாகும்.

இந்த நிலை உருவாகுவதை தமிழ்த் தேசியக் கட்சிகள் ஏற்றுக்கொள்ளுமா? அல்லது மணிவண்ணணின் இருப்பு நிலையானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் எதிர்காலம் கேள்விக்குறியாகும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை என்ற நிலையில் நாளைய வரவு-செலவுத்திட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வகிபாகமே மணிவண்ணணின் முதல்வர் கனவை தக்கவைக்கும் ஒரே தெரிவு. இதற்கான காய் நகர்த்தல்கள் முதல்வர் மணிவண்ணண் தரப்பிலிருந்து பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் நேற்றைய தினமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுடன் பேச்சுவார்த்தையில் மணிவண்ணண் தரப்பு ஈடுபட்டுள்ளதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு தரப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்பான எதிர்த்த 3 உறுப்பினர்கள் உட்பட மணிவண்ணனுக்கு ஆதரவு தெரிவித்த 10 உறுப்பினர்களில் ஒரு சிலரும் மணியின் பட்ஜெட்டை தோற்கடிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கின்றமை அவர்களிடம் பெற்ற கருத்துக்கள் மூலம் அறியமுடிகின்றது.

இந்நிலையில் ஈ.பி.டி.பியின் முழுமையான ஆதரவு மணிவண்ணனுக்கு இருக்க வேண்டிய சூழ்நிலையில் ஏனைய பெரும்பான்மை கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் ஆதரவு தேவை என்ற நிலையில் மத்திய அரசு இந்திய அரசினால் யாழில் அமைக்கப்பட்ட யாழ். கலாசார மையத்தினை கைப்பற்றுவதற்கான கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் ஈ.பி.டி.பியின் 10 ஆசனங்களும் மணிவண்ணனுக்கு எதிரான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 ஆசனங்களுடன் ஆதரவான 10 உறுப்பினர்களில் 5 பேரை தம்பக்கம் இணைத்து சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் 5 ஆசனங்களையும் இணைத்து 23 ஆசனங்களை பெற்றாலே மணிவண்ணண் தோற்கடிக்கப்படுவது மட்டுமல்ல யாழ்.மாநகரசபையின் ஆட்சிப் பொறுப்பு மாநகர ஆணையாளரின் கீழ் வந்து விடும்.

ஆதற்கப்பால் ஈ.பி.டி.பியின் 10 ஆசனங்களுடன் சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக்



கட்சியின் 5 ஆசனங்களுமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தற்போதைய கருத்துக்கணிப்பின் படி மணிவண்ணனை எதிர்க்கும் (16 உறுப்பினர்களில்) 9 உறுப்பினர்கள் வாக்களித்தால் கூட 3 வாக்குகளால் மாநகர சபை மத்திய அரசிடம் பறிபோகும் நிலையேற்படலாம். இந்நிலையில் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும் மணிவண்ணனை ஆட்சியில் தக்க வைப்பதற்காக வாக்களிக்கும் நிலையில் கூட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வெற்றி பெற்று அவருக்கு ஆதரவளித்த 6 பேராவது ஆதரித்தாலே மணிவண்ணனின் தலை தப்பும்.

இந்நிலையில் மணிவண்ணணின் வரவு-செலவுத்திட்டம் வெற்றி பெறுமா? தோற்கடிக்கப்பட்டு மத்திய அரசின் கைகளில் செல்லுமா? ஏன்பதை நாளைய வாக்களிப்பில் கண்டு கொள்ளலாம்.

தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்பிளிகேஷன் (பிரைவேட்) லிமிடெட்
இலக்கம் : 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
ஆசிரிய பீடம்:- 0217388301, 0217388302, 0217388303
பக்ஸ்:- 0217388304 விளம்பரம்:- 0217388307, விநியோகம்:- 0217388309
செவ்வாய்க்கிழமை 14 டிசம்பர் 2021 Tuesday 14th December 2021

## ஒமிக்ரோன்; தடுப்பூசிகள் தொற்றை எதிர்த்து தடுக்குமா?


கொரோனா வைரஸ் தொற்றுநோயின் மற்றொரு அலையை எதிர்கொள்ள உலக நாடுகள் பல தயாராகிவிட்டாலும், இப்போது தோன்றியிருக்கும் உருத்திரிபு முன்பு நினைத்ததை விட சக்திவாய்ந்ததாக இருப்பதை புதிய ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. கோவிட் -19 இன் ஒமிக்ரோன் உருத்திரிபு டெல்டாவை விட அதன் ஆரம்ப கட்டத்தில் 4.2 மடங்கு அதிகமாக பரவுகிறது என்று ஜப்பானிய விஞ்ஞானி ஒருவரின் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது. புதிய உருத்திரி பின் தொற்று பற்றிய அச்சத்தை உறுதிப்படுத்தும் ஒரு கண்டுபிடிப்பை கியோட்டோ பல்கலைக்கழகத்தின் சுகாதாரம்,சுற்றுச்சூழல் விஞ்ஞானப் பேராசிரியரான ஹிரோஷி நிஷியுரா, நவம்பர் 26 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் உள்ள கௌடெங் மாகாணத்தில் உள்ள மரபணுத் தரவுகளை ஆய்வு செய்திருந்தார். ஒமிக்ரோன் உருத்திரிபு அதிகமாக பரவுகிறது. அத்துடன் இயற்கையாகவும் தடுப்பூசிகள் மூலமாகவும் கட்டமைக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தியிலிருந்து தப்பி விடுகிறது என்று நிஷியுரா தனது கண்டுபிடிப்புகளில் கூறியிருக்கிறார். இந்த ஆய்வு விபரம் கடந்தவாரம் ஜப்பானின் சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுவின் கூட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

டெல்டாவை விட ஒமிக்ரோன் உலகிற்கு ஒரு பெரிய தாக்கத்தை கொடுக்கக்கூடும் என்ற கவலைகள் உலகளாவிய ரீதியில் பரவி வருகின்றன. இது 'கடுமையான விளைவுகளுடன்' தொற்றுக்களை தூண்டக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பு எச்சரித்திருக்கிறது. ஒமிக்ரோன் உருத்திரிபின் சில தன்மைகள் அதன் பரவல் மற்றும் அதிக எண்ணிக்கையிலான பிறழ்வுகள் உட்பட கொவிட் -19 தொற்று நோயின் போக்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்று உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் எச்சரித்துள்ளார்.சர்வதேசமட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆராய்ச்சியாளர்கள் புதிய உருத்திரிபு பற்றி புரிந்துகொள்வதற்கான போட்டியில் ஈடுபட்டுள்ளதாகத் தோன்றுகிறது. இது தொற்றுநோய் தொடங்கியதிலிருந்து உலக சுகாதார அமைப்பால் அடையாளம் காணப்பட்ட ஐந்து வகைகளில் மிகவும் வேறுபட்ட திரிபாகும். ஒமிக்ரோனை எதிர்த்துப் போராடுவதற்கு ஏற்கனவே உள்ள பிறபொருளெதிரிகள் எவ்வளவுக்கு பயனுள்ளதாக இருக்கும்? பூஸ்டர் கிடைத்தால் ஆட்கள் பாதுகாக்கப்படுவார்களா ? அல்லது கொவிட் -19 நோயால் பாதிக்கப்பட்டு தடுப்பூசி போட்டிருந்தால் பாதுகாக்கப்படுவார்களா? என்பவை ஆய்வுகூட முடிவுகளுக்காக காத்திருக்கும் முக்கிய கேள்விகள். இதேவேளை கண்காணிப்பு, சோதனையை அதிகரிக்க உலக சுகாதார அமைப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

சமீபத்திய கொவிட் -19 உருத்திரிபின் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், உலகளாவிய தொற்றுநோயியல் தரவுகள் எடுக்கப்பட்டு பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, உறுதியான முடிவுகளை எடுக்க இன்னும் நாட்கள் அல்லது வாரங்கள் தேவை என்று உலக சுகாதார அமைப்பு கூறியுள்ளது .ஆனால் தென்னாபிரிக்காவில் உருத்திரிபு தோன்றியதைத் தொடர்ந்து தொற்றுக்களின் அதிகரிப்பு இன்னும் மருத்துவமனைகளை மூழ்கடிக்கவில்லை. அதனால் பெரும்பாலும் இலேசான நோயை மட்டுமே ஏற்படுத்தக்கூடும் என்ற நம்பிக்கைக்கு வழிவகுத்திருக்கிறது . தென்னாபிரிக்காவில் இரண்டு வாரங்களுக்கு முன்பு ஓமிக்ரோனின் கண்டுபிடிப்பை முதன்முதலில் அறிவித்ததில் இருந்து ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 20,000 தொற்றுகளென வேகமாக அதிகரித்துள்ளன. இதற்கு முன்னைய வாரங்களில் அந்த நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுகளின் எண்ணிக்கை குறைவாகவே இருந்தது.

இதேவேளை கொவிட் -19 ஐ ஏற்படுத்தும் சார்ஸ் -சி ஓ.வி. -2 இன் உருத்திரிபுகள் பௌதீக மற்றும் உயிரியலின் விதிகளை மாற்றாதெனவும் உயர்தர முகக்கவசங்கள் .சிறந்த காற்றோட்டம் போன்ற தடைகள் வைரஸை இன்னும் தடுக்குமெனவும் தடுப்பூசிகள் தொடர்ந்து ஓரளவு பாதுகாப்பை வழங்குமெனவும் மருத்துவ நிபுணர்களில் ஒருசாரார் கூறுகின்றனர்.தற்போதைய தடுப்பூசிகளை உலகம் மாற்ற வேண்டுமா அல்லது இன்னும் பலவற்றை வழங்க வேண்டுமா என்பது கேள்வியாக காணப்படுகிறது.ஓமிக்ரோன் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காய்ச்சல், தலைவலி, வரட்டு இருமல், இரவில் உடல் வியர்த்தல், உடல் வலி போன்ற அறிகுறிகள் காணப்படும் அதேவேளை, தடுப்பூசி போட்டுக்கொண்டாலும்கூட சிலர் இந்த நோய்த்தொற்றால் பாதிக்கப்படுகிறார்கள் .ஆனால் அச்சப்படும் அளவில் பாதிப்பு இருப்பதில்லை. ஐரோப்பாவில் ஏற்கனவே காணப்படும் நான்காவது அலை நோய்த்தொற்றுக்கு இடையே இப்போது ஒமிக்ரோன் உருமாற்றம் பரவத் தொடங்கியிருப்பது அச்சத்தை அதிகரிக்கிறது.தடுப்பூசியாலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாலும் கொவிட்- 19 கொள்ளை நோய்த்தொற்றை எதிர்கொண்டு பாதிப்பில்லாமல் வாழ்க்கையை தொடரலாம் என்று நம்பிக்கையுடன் இருப்போம்.

# தீர்க்கமுடியாத சிக்கலான புதிருடன் இலங்கை


விக்டர் ஐவன்

தற்போதைய நெருக்கடி நிலைமை முன்கூட்டியே கணிக்கத் தவறிய இலங்கை, வரப்போகும் அதிகளவு சிக்கலான நெருக்கடியை எதிர்பார்ப்பதற்கு வாய்ப்பில்லை. நாட்டின் பாதுகாப்பிற்குச் செய்யக்கூடிய மிகவும் விவேகமான விடயம் என்னவெனில் , இது மிகப்பெரிய ஆபத்தில் உள்ளது என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு அத்தகைய நிலைமையைத் தடுப்பதற்குத் தேவையான மறுசீரமைப்புகளை கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியிடையே கருத்தொருமைப்பாட்டை எட்டுவதாகும்







இலங்கையின் தற்போதைய நிலைமையை தீர்க்க முடியாத ஒரு சிக்கலான புதிருடன் ஒப்பிடலாமெனத் தோன்றுகிறது. அதன் முக்கிய அம்சங்கள் சில: நாடு விரைவில் பேரழிவை கொண்டிருக்கும் பயங்கரமான நிலையில் உள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியை இந்த அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டதாக மட்டும் கருத முடியாது. இலங்கையை நீண்டகாலமாக அடுத்தடுத்து ஆட்சிசெய்துவந்த அரசாங்கங்கள் தவறுகள் இடம்பெற்றபோது எதிர்க்கட்சிகளின் பலத்த எதிர்ப்பை எதிர்கொள்ளாமலும்,சீர்செய்வதற்கு எந்த முயற்சியும் எடுக்காத நிலையில், தவறான, அழிவுகரமான, கொள்ளையடிக்கும், ஊழல் மற்றும் முட்டாள்தனமான கொள்கைகளால் ஏற்பட்ட ஒரு தனித்துவமான நெருக்கடி இது.

தற்போதைய அரசாங்கத்தால் ஏற்பட்ட அழிவை முற்றிலுமாகத் தடுக்க முடியாமல் போயிருந்தாலும், குறைந்தபட்சம் முறைமையை சீர்திருத்துவதற்கும் மீண்டும் உருவாக்குவதற்கும் கட்டமைப்புச் சீர்திருத்தங்களுக்கான ஒரு திட்டத்திற்கான கதவைத் திறந்திருக்க வேண்டும். மேலும், நெருக்கடியை உகந்த முறையில் நிர்வகிப்பதற்கான நடைமுறைத் திட்டத்தைத் தொடங்குவதன் மூலம், நாட்டிற்கு ஏற்படும் சேதத்தை கணிசமாகக் குறைத்திருக்கலாம்.

### தொலைநோக்கு பற்றாக்குறை

தற்போதைய ஜனாதிபதிப் பதவிக்கு வருவதற்கு முன்னர் நாடு எதிர்கொண்ட நெருக்கடிகளை முன்கூட்டியே எதிர்பார்ப்பது தொடர்பாக தோல்விகண்டது மட்டுமன்றி, ஆட்சிக்கு வந்த பின்னரும் அதனை ஆழமாகப் புரிந்துகொள்ள முடியாமல் போய்விட்டது .அதனால், நெருக்கடியானது உகந்த முறையில் முகாமைத்துவப்படுத்தப்படவில்லை. மாறாக குழப்பத்தை அதிகப்படுத்தும் விதத்தில், வரவிருக்கும் பேரழிவை மோசமாக்குகிறது.

ஜனாதிபதிக்கு அரசியல் அல்லது அரச முகாமைத்துவத்திறனில் முன் அனுபவம் இல்லை. அவர் ஆட்சி செய்வதற்கு மரபுரிமையாகப் பெற்ற நாடு, எளிதில் ஆளக்கூடிய நிலையில் இல்லை, ஒரு அனுபவமிக்க அல்லது ஒரு சிரேஷ்ட ஆட்சியாளரால் கூட எளிதாக ஆட்சி செய்ய முடியாத, முற்றிலும் குழப்பமானதாக இருந்தது.

மறுபுறம், தற்போதைய ஜனாதிபதி ஏனைய ஜனாதிபதிகள் செய்ததைப் போல, கணிசமான எண்ணிக்கையிலான பங்காளிகளுடன் அதிக எண்ணிக்கையிலான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொண்டு அதிகாரத்திற்கு வந்தார். ஏனைய ஜனாதிபதிகளைப் போலல்லாமல், தற்போதைய ஜனாதிபதியின் தேர்தல் பிரசாரம் நீண்டகாலமாக இருந்தது. அதன் விளைவாக மற்ற ஜனாதிபதிகளுடன் ஒப்பிடுகையில் அவரது ஜனாதிபதி பிரசாரத்திற்காக அவரது கூட்டாளிகள் மிக அதிக செலவை செய்ய வேண்டியிருந்தது.

இந்த நெருக்கடியான சூழ்நிலையில், முறைமையின் சீர்குலைவு காரணமாக, அனுபவமற்ற நிலையில் தன்னிச்சையாகவும் ஏற்படுத்தப்பட்ட முறைமைக்கு வெளியேயும் ஜனாதிபதி, செயற்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. பாதுகாப்புச் செயலாளராக கடந்த உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் பெற்ற வெற்றியுடன் ஒப்பிடுகையில், இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடி அற்பமானது என்று ஜனாதிபதி ஆரம்பத்தில் நினைத்தார். இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது, பாதுகாப்புப் படையினரின் ஆதரவுடன் இலகுவாக சமாளிக்கக்கூடிய ஒரு இலகுவான பிரச்சினையாக உணரப்பட்டது. இது ஜனாதிபதி செய்த பாரிய தவறாகவே கருத முடியும்.

அனுபவம் வாய்ந்த மற்றும் படித்த அதிகாரவர்க்கத்தை நம்புவதற்குப் பதிலாக, ஜனாதிபதி, அழகான கற்பனாவாதக் கருத்துக்களைக் கொண்ட அனுபவமற்ற மற்றும் மேலோட்டமான கோட்பாட்டாளர்களை நம்புவதைத் தேர்ந்தெடுத்தார். அவர் தவறு செய்த மற்றொரு நிகழ்வாக இதைக் கருதலாம்.

இதற்கு சிறந்த உதாரணம், இரசாயன உரங்கள் மற்றும் விவசாய இரசாயனங்களுக்கு விதிக்கப்பட்ட தடை மற்றும் விவசாயத்தில் ஏற்பட்ட பாரிய நெருக்கடி. பொருளாதார வீழ்ச்சி மற்றும் மக்கள் மீது தாங்க முடியாத அழுத்தங்கள் இருந்தபோதிலும், ஜனாதிபதி தனது கூட்டாளிகளை அதிகபட்சமாக சுரண்ட அனுமதிக்கும் கொள்கையை பின்பற்றினார். இந்நிலைமை நாட்டில் நெருக்கடியை அதிகப்படுத்தியது மட்டுமன்றி ஜனாதிபதியின் மீதான மக்களின் நம்பிக்கையை குலைப்பதற்கும் முக்கிய காரணியாக அமைந்தது.

### பிரச்சினைகளை அதிகப்படுத்துதல்

ஜனாதிபதிமிகப்பாரிய ஆணையைப் பெற்று ஆட்சிக்கு வந்தார். ஆனால் அந்த ஆணை இப்போது முற்றாக வெறுமையாகிய நிலையில் உள்ளது. இவ்வளவு விரைவாக செல்வாக்கற்றதாக மாறிய எந்த அரசாங்கமும் இலங்கையில் இருந்ததில்லை. நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியானது கட்டுப்படுத்த முடியாத பேரழிவின் விளிம்பில் உள்ளது.

சில அடக்குமுறை நிலைமைகளை உள்ளடக்கியிருந்தாலும், சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதன் மூலமும், தேவையான கடன் வசதிகளைப் பெறுவதன் மூலமும் தீர்வு காணப்படக்கூடியதொரு கட்டத்தில்சென்மதி நிலுவை நெருக்கடி இருந்தது. நெருக்கடியைத் தீர்க்க வேறு வழிகள் இருப்பதாகக் கூறி, சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெற வேண்டாம் என்று ஜனாதிபதியை வற்புறுத்தியவர் யாராக இருந்தாலும், அவர் அறிந்தோ அறியாமலோ, நாட்டிற்கும் தனது ஜனாதிபதிக்கும் செய்த சேதம் மிகப்பெரியது. இந்த முட்டாள்தனமான மற்றும் அழிவுகரமான கொள்கை, ஒரு கட்டத்தில், முழு நாட்டையும்வீழ்ச்சியடையச் செய்து செயலிழக்கச் செய்யும், தோல்வியுற்ற, அராஜகமான சூழ்நிலைக்கு தள்ளிவிடும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் உருவாகும் பிரதிமை சிறியளவில் கூட ரம்மியமானதல்ல. இலங்கையின் வங்கியியல் முறைமை முழுமையாகவீழ்ச்சியடையக்கூடும். சேமிப்புக் கணக்குகளில் வைப்புத் தொகையின் மதிப்பு பெறுமதியற்றதாகிவிடும். பணவீக்கம் தாங்க முடியாத சுமையாக மாறும், மேலும் பொருட்களை வாங்குவதற்குத் தேவைப்படும் பணத்தின் அளவு வாங்கப்பட்ட பொருட்களின் அளவைப் போலவே பெரியதாக இருக்கும். மின்சாரம் மற்றும் போக்குவரத்துக்கு இன்றியமையாத எரிபொருள் விநியோகம் செயலிழப்பதால், முறைமை முழுதாக முடிவுக்கு வந்துவிடும்.

இந்த மோதல் எப்போது நடக்கும்? அநேகமாக, அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, இன்றிலிருந்து ஓராண்டுக்கு அதிகமாகவோ அல்லது குறைவாகவோ இது நடக்கலாம். அத்தகைய சூழ்நிலையை சமாளிக்க அரசாங்கத்தின் திறமையின் எல்லையை புரிந்துகொள்வது கடினம் அல்ல.

இத்தகையதொரு சூழ்நிலையை எதிர்கொள்வதற்கான தொலைநோக்கு எதிர்க்கட்சிகளுக்கு இருக்கிறதா? தேர்தல் இல்லாமல் ஆட்சியைப் பிடிக்க எதிர்க்கட்சிகள் எப்படி முயற்சி செய்கின்றனர்? தற்போது எதிர்க்கட்சியின் கவனம் நெருக்கடி அல்லது அதன் முடிவு பற்றியது அல்ல, மாறாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மீதே உள்ளது. அங்கு மீண்டும், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், தாங்கள் கொண்டுவர உத்தேசித்துள்ள மறுசீரமைப்புகள் குறித்து எவரும் முறையாகப் பேசுவதில்லை.

ஜனாதிபதி முறைமையில் அவர்களின் கொள்கை என்ன? அவர்கள் தற்போதைய முறையைத் தக்கவைத்துக் கொள்ள நினைத்தால், தற்போது சட்டத்திற்கு மேலாக வுள்ள ஜனாதிபதியை சட்டத்திற்குக் கீழே வைப்பார்களா? ஜனாதிபதியின் செயற்பாடுகள் சட்டத்திற்கு முரணானது என கண்டறியப்பட்டால் அதனை இரத்துச் செய்யும் அதிகாரத்தை நீதித்துறைக்கு வழங்குவார்களா? ஜனாதிபதியும் ஆளும்கட்சி எம்.பி.க்களும் இணைந்து கூட்டாகச் செயற்பட்டு பல்வேறு வழிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத பொதுச் சொத்துக் கொள்ளைக்கு முற்றுப்புள்ளி வைக்க நடவடிக்கை எடுக்கிறார்களா? அதைத் தடுக்க என்ன கொள்கைகள் மற்றும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன?

கட்சி நிதி மற்றும் தேர்தல் நிதியை கட்டுப்படுத்த சட்டம் இயற்றப்படுமா? அரசியல் கட்சிகளின் உள் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் சட்டங்கள் இயற்றப்படுமா? ஏற்கனவே சிதைந்து கிடக்கும் தேசிய ஒருமைப்பாட்டை எந்தவகையில் மேம்படுத்த திட்டமிடுகிறார்கள்? இதுபோன்ற அடிப்படைப் பிரச்சினைகளை முன்கூட்டியே மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு இருக்க வேண்டாமா?

### புதிருக்கு தீர்வு காணுதல்

அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் முழு முறைமையும் வீழ்ச்சியடைந்தால், அடுத்த தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை உருவாகினால் என்ன செய்வது என்ற கேள்வியில், எளிதில் தீர்க்க முடியாத அரசியல் புதிர் கட்டமைக்கப்பட்டுள்ளது.

இப்போது இலங்கை அத்தகைய கடுமையான ஆபத்தின் வாசலில் உள்ளது. ஆனால், தற்போதைய நெருக்கடியை முன்கூட்டியே கணிக்கத் தவறிய இலங்கை, வரப்போகும் சிக்கலான நெருக்கடியை எதிர்நோக்க வாய்ப்பில்லை. நாடு பெரும் ஆபத்தில் உள்ளது என்ற உண்மையை ஒப்புக்கொண்டு, அதைத் தடுப்பதற்குத் தேவையான சீர்திருத்தங்களைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே கருத்தொருமைப்பாட்டை எட்டுவதுதான் நாட்டின் பாதுகாப்பிற்குச் செய்யக்கூடிய மிக விவேகமான காரியம்.

முழு முறைமையிலும் ஒரு முழுமையான மாற்றம் ஏற்படும் வகையில், அந்த முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டுமா அல்லது மீண்டும் உருவாக்கப்பட வேண்டுமா என்பதை தீர்மானிக்கும் அதிகாரம்சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இது ஒரு இலகுவான சீர்திருத்தத் திட்டமாக இருந்தாலும் அல்லது ஒட்டுமொத்த முறைமையில் முழுமையான மாற்றத்தை நோக்கமாகக் கொண்டதாக இருந்தாலும், அதற்கு அரசியலமைப்புத் திருத்தம் அல்லது புதிய அரசியலமைப்பு உருவாக்கம் தேவைப்படும். இந்த நிலையில், அரசியலமைப்பு திருத்தம் வேண்டுமா அல்லது புதிய அரசியலமைப்பு வேண்டுமா என்பது குறித்து பொதுமக்களிடம் கருத்து கேட்கலாம்.


அவர்கள் புதிய அரசியலமைப்பைக் கோரினால், அது பாராளுமன்றத்தின் தலைமையிலான அரசியலமைப்பு நிர்ணய சபையா அல்லது அதற்கென பிரத்தியேகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியலமைப்பு நிர்ணய சபை உருவாக்கப்பட வேண்டுமா என்ற கேள்வி சர்வஜன வாக்கெடுப்புக்கு அனுப்பப்படலாம். அரசியலமைப்பானது பாராளுமன்றத்தால் உருவாக்கப்படாவிட்டால், அரசியலமைப்பு மற்றும் சீர்திருத்தங்களை உருவாக்கும் அதிகாரம் ஒரு துணைச் சட்டத்தால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவைக்கு வழங்கப்படலாம். அப்போது நெருக்கடியை சமாளித்து தேவையான சீர்திருத்தங்களை செய்துவிட்டு அடுத்த தேர்தல் நடத்தப்படும். இவ்வாறான ஒரு விரிவான பொது வேலைத்திட்டத்திற்குத் தேவையான போதிய அறிவையும் ஒழுக்கையும் இலங்கை மக்கள் கொண்டிருக்கவில்லை என நம்பும் சிலர் நாட்டில் உள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வாக்களித்த விதம் இதற்கு மிகவும் பொதுவான உதாரணம்.

மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க முடியாதுஎன்றஅபாரமான பிம்பத்தைக் கட்டியெழுப்பியவர்கள்தான் 2015 ஜனாதிபதித் தேர்தலில் அவரைத் தோற்கடித்திருந்தனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் அவர்களை கடுமையான மன அதிர்ச்சியில் ஆழ்த்தியிருந்த நிலையில்,நல்லாட்சி அரசாங்கத்தின் தோல்வி அவர்கள் மத்தியில் பெரும் விரக்தியை ஏற்படுத்தியிருந்தது.

கோதாபயவின் வெற்றி எவ்வளவு பெரியதாக இருந்தாலும், ஜனாதிபதி பின்பற்றும் கொள்கைகள் நல்லதல்ல, அவர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்புடையதல்ல என்பதை அவதானித்த மக்கள், அவர் மீதான விசுவாசத்தை கைவிட்டு, அரசாங்கத்திற்கு எதிராக கடுமையான எதிர்ப்பை உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளனர்.இச்சூழலில், கொவிட் விவகாரத்தில் சில சுகாதார அதிகாரிகளும் விவசாயத் துறையில் சில உயர் அதிகாரிகளும் உரப் பிரச்சினையில் காட்டிய தைரியம் மிகவும் பாராட்டத்தக்கதாகவும் உணர்வுபூர்வமானதாகவும் கருதப்படலாம்.

பல நாடுகளில் மக்கள் அரசியலமைப்பு அல்லது பங்கேற்பு அரசியலமைப்பை வெற்றிகரமாக ஏற்றுக்கொண்டவர்கள் .இலங்கை மக்களுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் அறியாதவர்கள். சில நாடுகளில் படுகொலைகளின் அளவு மிகவும் பயங்கரமானது. இலங்கை எதிர்கொள்ளும் நெருக்கடியைச் சமாளிப்பதற்கான சிறந்த வழி, மக்கள் அரசியலமைப்பை ஏற்றுக்கொள்ளுமாறு நாட்டை வழிநடத்துவதாகும்.

**பினான்சியல் டைம்ஸ்**



# தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்களை பலவந்தமாகவே வெளியேற்றினர்

## -கூட்டமைப்பு உறுப்பினர் நிவாகீர் ஜனாதிபதி ஆணைக்குழு முன் தெரிவிப்பு-



தமிழீழ விடுதலை புலிகள் வடக்கில் இருந்து முஸ்லிம் மக்களை பலாக்காரமாகவே வெளியேற்றினார்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் யாழ் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட யாழ் மாநகர சபைக்கு தெரிவான உறுப்பினர் முகமட் நிவாகீர் ஜனாதிபதி ஆணைக் குழு முன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியங்களை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1990 ஆம் ஆண்டு நாம் பலவந்தமாக வெளியேற்றப்பட்ட போது தமது உடமைகள் கைவிட்டுச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

யாழ். மாவட்டத்தில் முஸ்லிம்களின் கல்வி நிலை மிகவும் மோசமாக உள்ள நிலையில் ஆயுதமுனையில் எம்மை அனுப்பியது போன்று தற்போது பேனா முறையில் அனுப்பி விடலாம் என சில அதிகாரிகள் நினைக்கிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளான கதீஜா பாடசாலை மற்றும் ஒஸ்மானியா பாடசாலை ஆகியன அவிருத்தி செய்யப்படாமல் உள்ளது

பள்ளிக்கூடாவில் முஸ்லிம்கள் வாழ்ந்த பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் உள்ள நிலையில் அதனை எமது சமூகத்துக்கு பெற்று தர வேண்டும்.

ஆகவே முஸ்லிம் மக்கள் கல்வி,கலாசாரம், பாதுகாப்பு முதல் குடியேற்றம், சொத்து இழப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த ஆணைக்குழு மூலம் அதற்கு தீர்வு கிடைக்கும் என தான் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். 75

# இராணுவத்தினரால் சிரமதான பணிகள் முன்னெடுப்பு



முல்லைத்தீவு - விஸ்வமடு, ஒட்டுசுட்டான் , கிளிநொச்சி கண்ணிநகர் பிள்ளையார் கோவில் வளாகம் உள்ளிட்ட சாலையோரங்களிலும் இராணுவத்தினரால் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. முல்லைத்தீவு பாதுகாப்புப் படைத் தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சய வனசிங்கவின் வழிகாட்டுதலுக்கு அமைவாக முல்லைத்தீவு மாவட்டத்தின் பொதுப் பிரதேசங்களிலும் விஸ்வமடு மற்றும் கண்ணிநகர் பிள்ளையார் கோவில் வளாகத்திலும் சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் மற்றும் படையினரிடையே நல்லுறவை மேம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட சிரமதான பணிகள் 57 ஆவது படைப் பிரிவின் தளபதி மேஜர் ஜெனரல் பிரியந்த ஜயவர்தன மற்றும் 572 ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் நிஷாந்த முத்துமால ஆகியோர் இத்திட்டத்தை மேற்பார்வை செய்தனர். 6 ஆவது இலங்கை சிங்க படையணி மற்றும் 14 ஆவது இலங்கை தேசிய பாதுகாப்பு படையணியின் படையினர் அதிகாரிகளுடன் இணைந்து மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

இதேவேளை ஒட்டுசுடான் வைத்தியசாலை வளாகத்தை துப்புரவு செய்வதற்கு உதவுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய 61 ஆவது படைப் பிரிவு தலைமையகத்தின் தலைமையில் 641 ஆவது பிரிகேட் சிப்பாய்கள் 641 ஆவது பிரிகேட்டின் கீழ் உள்ள அனைத்து பிரிவுகளும் அவற்றின் கட்டளை அதிகாரிகளின் வழிகாட்டுதலின் பேரில் திட்டத்திற்கு பங்களிப்புகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. 55

# காட்டுப் பகுதியில் துப்பாக்கி ரவைகள் மீட்பு




கிளிநொச்சி- கோரக்கண் காட்டுப்பகுதியில் உள்ள தனியார் காணியொன்றில் இருந்து துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கன் கட்டு பூங்காவனம் சந்திப்பகுதியில் உள்ள தனியார் காணி ஒன்றில் நேற்று குழி ஒன்றை வெட்டிய போது சில துப்பாக்கி ரவைகள் அடையாளம் காணப்பட்டதை அடுத்து கிளிநொச்சி பொலிசாருக்கு தகவல் வழங்கப்பட்டது இதனையடுத்து நேற்று சம்பவ இடத்துக்கு சென்ற கிளிநொச்சி பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் குறித்த பகுதியில் இருந்து துப்பாக்கி ரவைகளை மீட்டுள்ளனர் இதேவேளை மேலும் குறித்த குழியினுள் வெடிபொருட்கள் இருக்கலாம் என்ற கோணத்தில் கிளிநொச்சி பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

55

# விழுது அமைப்பால் கருத்தமர்வு



கிளிநொச்சியில் மாண்புடன் கூடிய குடும்பங்களை தலைமை தாங்கும் பெண்கள் எனும் தொனிப்பொருளிலான கருத்தமர்வு ஒன்று விழுது அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்றது. மாவட்ட கூட்டுறவு சபை மண்டபத்தில் விழுதுகள் அமைப்பைச் சேர்ந்த மோகனதாஸ் ஷர்மிளா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் போதைப் பெருள் மற்றும் சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனை என்பனவற்றினால் ஏற்படும் பாதிப்புக்கள் அதிலிருந்து விடுபடுவதற்கு சமுகத்தின் தேவை தொடர்பிலும் சமுக சேவைகள் மற்றும் பெண் தெழில் முயற்சியாளர்களின் உற்பத்தி பொருடகளை சந்தைப்படுத்தல் சிறுவர் பெண்கள் பாதுகப்பு கருத்துகள் வழங்ப்பட்டன.

மாவட்ட மது வரி அத்தியட்சகர், சமுக சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர் என பலர் வளவாளர்களாக கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை வழங்கினர் மேற்படி கருத்தமர்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட அமரா பெண்கள் சமாசம் மாவட்ட பெண்கள் அமைப்புக்கள் கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த விழுது மையத்தின் உத்தியோகத்தர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. 55

# மக்களுக்கு சிறந்த சேவை வழங்கும் கிராம அலுவலர் பிரிவாக அனிச்சியன் குளம் தெரிவு



முல்லைத்தீவு மாவட்டத்தில் கிராம அலுவலர்களின் அலுவலக முகாமைத்துவப் போட்டி 2021இன் மதிப்பீடுகள் மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகவும் மதீப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது கிராம அலுவலர் சேவை ஊடாக நிறைவேற்ற எதிர்பார்க்கும் மக்கள் சேவைகளை சிறந்த முறையில் ஆற்றுவதற்கு மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களின் தரத்தினை மேம்படுத்துவதனை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது.

அதனடிப்படையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் கீழுள்ள ஆறுபிரதேச செயலர் பிரிவுகளையும் உள்ளடக்கிய மதிப்பீடுகள் வெளியிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனிச்சியன்குளம் கிராம அலுவலர் முதலாவது இடத்தினை பெற்றுள்ளது.

மேலும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டுக்குளம் கிராம அலுவலர்பிரிவு பிரிவு இரண்டாவது இடத்தினை பெற்றுள்ளது.

அதேவேளை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கள்ளப்பாடு வடக்கு கிராம அலுவலர் பிரிவு மூன்றாவது இடத்தினை பெற்றுள்ளது.

இதனைவிட மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கரும்புள்ளியான் கிராம அலுவலர் பிரிவு நான்காவது இடத்தினை பெற்றுள்ள அதே வேளை கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை வடக்கு கிராம அலுவலர் ஐந்தாவது இடத்தினையும் பெற்றுக் கொண்டுள்ளது.இதனூடாக தமது சிறப்பான வினைத்திறன் மிக்க சேவைக்காக முதல் ஐந்து இடங்களையும் பெற்றுக் கொண்ட கிராம அலுவலர்களுக்கு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் அவர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட மக்கள் சார்பாக தனது இதயப்பூர்வமான நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் தெரிவித்துள்ளார்.

15

# சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனைகளை சட்டத்தினால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது

## - கிளிநொச்சி மாவட்ட மதுவரி அத்தியட்சகர் தெரிவிப்பு-



சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனைகளை சட்டத்தினால் மட்டும் கட்டுப்படுத்த முடியாது சமூகத்தின் ஒத்துழைப்பின் மூலமே முற்றுமுழுதாக கட்டுபடுத்த முடியும்என கிளிநொச்சி மாவட்ட மதுவரி அத்தியட்சகர் கிருபாகரன் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் விழுது அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாவட்டத்தில் சட்டவிரோத மதுபான உற்பத்தி விற்பனை என்பன அதிகளவில் காணப்படுகின்றன குறிப்பாக பெண்களும் இவ்வாறான தொழில்களில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக ஒரு சில பெண் தலைமைத்துவ குடும்பங்களும் இவ்வாறான சட்டவிரோத தொழில்களில் ஈடுபடுவதை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான சட்டவிரோத மதுபான விற்பனை உற்பத்திகள் தொடர்பில் 22 பெண்கள் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது

குறிப்பாக மாவட்டத்தில் பல சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அண்மையில் கூட முட்கொம்பன் பிரதேசத்தில் இவ்வாறான சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு இந்த சட்டங்களை மட்டும் பயன்படுத்தி இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது

சமூகத்தில் இருந்து வருகின்ற ஒத்துழைப்புக்கள் மற்றும் விழிப்புணர்வுகள் மூலமே இந்த சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்த முடியும் குறிப்பாக ஒவ்வொரு கிராமங்களிலும் இருக்கின்ற கிராம மட்ட அமைப்புகள் மதப் பெரியார்கள் சமூக ஆர்வலர்களின் ஒத்துழைப்புக்கள் அவசியமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். 55

# இரத்ததான முகாம்



தற்போதைய இரத்தத் தட்டுப்பாட்டினைக் கருத்திற்கொண்டு கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும், குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்திய மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு நேற்று முன்தினம் காலை-08.30 மணி முதல் பிற்பகல்-02 மணி வரை கோண்டாவில் ஈழத்துச் சபரி மலை ஐயப்பன் கோயில் அருகாமையில் உள்ள குட்டிச் சுட்டி முன்பள்ளியில் இடம்பெற்றது.

இரத்ததான முகாம் நிகழ்வில் 3 யுவதிகள், இளைஞர்கள் என 40 பேர் வரை மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர். யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் இரத்தவங்கிப் பிரிவினர் நேரடியாகக் கலந்து கொண்டு இரத்தம் பெற்றுக் கொண்டனர்.

இதேவேளை, அனைத்துக் குருதிக் கொடையாளர்களுக்கும் அழகிய ரீசேட்கள் அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (18)

# பாலைப்பாணி கிராமத்திற்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரக் கோரிக்கை

முல்லைத்தீவு -பாலைப்பாணி கிராமத்திற்கான பிரதான வீதி கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமை மற்றும் போக்குவரத்து வசதியின்மை தொழில் வாய்ப்பின்மை, என்பவற்றால் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளன.

மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படும் பாலைப்பாணி கிராமத்தில் கடந்த காலங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில் கடந்த காலயுத்தம் காரணமாக அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்து இந்தியாவின் தமிழகத்திற்கு சென்றுள்ளனர். யுத்தத்தின் பின்னரான மீள்குடியர்வையடுத்து. மேற்படி கிராமத்தில் 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி பத்து ஆண்டுகளாகிய நிலையிலும் மேற்படி கிராமத்திற்கான பிரதான வீதியாக காணப்படும் வன்னிவிளாங்கும் மூன்றுமுறிப்பு வீதி இது வரை புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதுடன், மழைகாலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இதனைவிட குறித்த கிராமத்தில் தினமும் காட்டுயானைகளின் அச்சுறுத்தல் காணப்படுவதுடன், வீதிப் போக்கு வரத்துக்களின் போதும் யானை அச்சுறுத்தல் மத்தியிலும் பாலப்பாணி கிராமத்தில் இருந்து வன்னிவிளாங்குளம் மற்றும் மாங்குளம் உள்ளிட்ட பாடசாலைகளுக்கு தினமும் ஒன்பது கிலோமீற்றர் தூரம் காட்டு பாதைவழியாக பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள் யானைகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாகவும் கிராமமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிராமத்தில் வாழும் அனைத்து குடும்பங்களும் வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றன என்றும் தற்போது எந்தவித தொழில் வாய்ப்புக்களும் இன்றியே வாழ்ந்து வருவதாகவும் மேற்படி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

விவசாயத்தை நம்பி வாழும் தாங்கள் தற்போது விவசாயத்திற்கு தேவையான களைநாசினி உரவகைகள் இல்லாத நிலையில் அதனையும் கைவிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும்தெரிவித்துள்ளனர்.

# தமிழ்க் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் இவ்வாறு கூறுவதை நிறுத்துங்கள்

## -ஆனந்த சங்கரி தெரிவிப்பு-



குறிப்பிட்ட ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதை தயவு செய்து நிறுத்திக்கொள்ள வேண்டும். என தமிழர் விடுதலைக்கூட்டணி தெரிவித்துள்ளது.

அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கை யிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

குறிப்பிட்ட ஒரு சில கட்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு, தமிழ் பேசும் கட்சிகளின் ஒருமித்த தீர்மானம் என்று ஊடகங்கள் முடிசூட்டுவதை தயவு செய்து நிறுத்திக்கொள்ள வேண்டும். ஒரு சில கட்சிகள் ஒன்று சேர்ந்து எடுத்திருக்கும் முடிவு தமிழ் மக்களுக்கு மேலும் ஆபத்தையும் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை குறிப்பிடட் கட்சிகளின் தலைவர்கள் புரிந்து கொள்ளவில்லை என்பதை நினைக்கும் பொழுது வேதனையை தருகின்றது.

அந்நிய நாடுகளின் அழுத்தத்தை பிரயோகிக்க சொல்லி கோருவது முட்டாள்தனமான செயற்பாடாகும். இதன் மூலம் உள்ளூர் அரசியல் வாதிகளையும் பெரும்பான்மையின கடும் போக்காளர்களையும் கோபமடைய செய்யும் செயலாகும் அதுமட்டுமல்ல குறிப்பிட்ட நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள புரிந்துணர்வை சிதைக்கும் செயற்பாடாகவும் அமைந்துவிடும்.

இலங்கை ஒரு இறைமையுள்ள நாடாகும். எந்த ஒரு நாடும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்கு மேல் தலையிடுவதை இலங்கையும் விரும்புவதில்லை. குறிப்பிட்ட நாடுகளும் இந்த விடயத்தில் மென்மையான போக்கையே கடைப்பிடிக்கும்.. இந்த விடயம் அனைத்து தரப்பினருக்கும் தெரிந்திருந்தும் மக்களை முட்டாள்களாக்குவது வன்மையாக கண்டிக்கத்தக்க விடயமாகும்.

எந்த ஒரு காலகட்டத்திலும் சமஷ்டி என்ற பேச்சிற்கே இடமில்லை என்று அனைத்துதரப்பினரும் கூறிய பின்பும் 'சமஷ்டியை பெற்றே தீருவோம்' என்று அறிக்கை விட்டு மக்களை ஏமாற்றுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கிய ரணில் விக்கிரமசிங்க சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்டார். அதற்கு எதிராக பிரசாரத்தை மேற்கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தமிழ் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்து ஒற்றையாட்சிக் கோரிக்கையை முன்வைத்து போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ அவர்களை வெற்றிபெறச்செய்தனர்.

இருந்தும் 49 சதவீதத்திற்கு மேற்பட்ட சிங்கள மக்கள் சமஷ்டிக் கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த வரலாற்றுத் தவறை செய்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இன்று சமஷ்டிக் கோரிக்கையை வைத்து கொக்கரிப்பது வேடிக்கையாக இருக்கின்றது. சமஷ்டி பற்றி பேசும் அருகதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு கிடையாது. இவர்களுடன் இணைந்து ஒரு சில கட்சிகள் கூடிப் பேசுவது பெரும் வியப்பாக இருக்கின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அன்று தொட்டு இன்று வரை இந்திய முறையிலான ஒரு அரசியல் தீர்வையே முன்வைத்து வருகின்றது. இதற்கு மேலாக இந்தியாவும் எமக்கு எதையும் பெற்றுத்தரப் போவதில்லை. பெருமளவு சிங்கள மக்களும் அரசியல் தரப்பினரும் ஒரு காலத்தில் இதற்கு ஆதரவு தெரிவித்தனர். அதன் அடிப்படையில் இன்று இலங்கையிடம் சமரசமாக பேசிப் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதே சாலச் சிறந்ததாகும்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தும் பலமான விடுதலைப்புலிகள் அமைப்பை வைத்துக்கொண்டு அவர்களால் மக்களுக்கு எதனையும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

2015ஆம் ஆண்டு தொடக்கம் 2020ஆம் ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தில் உயர்ந்த பதவிகளை வகித்துக்கொண்ட நேரத்தில் கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எதுவித தீர்வினையும் பெற்றுக்கொடுக்க முன்வரவுமில்லை. முயற்சிக்கவுமில்லை. இன்று இவர்களுடன் இணைந்து ஒரு சில கட்சிகள் ஒருமித்து தீர்மானங்களை நிறைவேற்றுவது நகைப்பிற்குரிய விடயமாகும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (55)

# ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சிக்கு விஜயம்



காணாமல் போனோர் தொடர்பான முன்னைய ஆணைக்குழுக்கள் , குழுக்கள் ஆகியவற்றின் கண்டுபிடிப்புக்களை மதிப்பீடு செய்தல்; எதிர்கால நடவடிக்கைகள் எடுப்பதற்கான ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டிருந்த குறித்த ஆணைக்குழு காணாமல் போனோரின் குடும்பங்களை சந்தித்து விசாரணைகளை மேற்கொண்டிருந்தது. குறித்த குழுவின் தலைவர் நீதியரசர் ஏ எச் எம்டி நவாஸ் தலைமையில் முன்னால் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ, முன்னாள் அரச அதிபர் நிமல் அபேசிங்க, யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோரை உள்ளடக்கிய ஆணைக்குழு உறுப்பினர்கள் இதன்போது பிரசன்னமாகியிருந்தனர்.

நேற்று யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலிருந்து காணாமல் போனவர்களின் உறவுகள் குறித்த ஆணைக்குழுவினரை சந்தித்து காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளை பதிவு செய்தனர்.

குறித்த முறைப்பாடுகளை ஆணைக்குழுவினர் மக்களின் முறைப்பாடுகள் தொடர்பில் தமிழில் கேட்டறிந்து பதிவு செய்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (55)

# சுண்டிக்குளம் இயற்கை பூங்கா சுற்றுலா விடுதி திறப்பு



சுண்டிக்குளம் இயற்கை பூங்கா சுற்றுலா விடுதி திறப்பு விழாவும், போரின் போது இரு கைகளையும் இழந்த பெண்ணொருவருக்கு கணிணிகள் வழங்கும் நிகழ்வு சுண்டிக்குளத்தில் அமைந்துள்ள 'நச்சுறல் பாக்கில்' நேற்று முற்பகல்10 மணியளவில் இடம்பெற்றது.

வடமராட்சி கிழக்கு சுண்டிக்குளம் இயற்கை பூங்கா, வளஜீவராசிகள் பகுதிக்குள் உள்ள சுற்றுலா விடுதி மீள் புனர் நிர்மானம் செய்யப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது போரின் போது இரு கைகளையும் இழந்து வெற்றிலைக்கேணி பகுதியில் கணிணி பயிற்சியை வழங்கி வரும் பெண்ணொருவருக்கு கொமெர்ஷல் வங்கியின் அனுசரனையுடன் 5 கணிணிகளும் வழங்கி வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடித்துவக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு இயற்கை பூங்காவின் சுற்றுலா விடுதியை திறந்து வைத்ததுடன் கணிணிகளையும் வழங்கி வைத்தார்.(44)

# மாவட்ட செயலகம் வெற்றி பெற்றதை முன்னிட்டு உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு



தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ். மாவட்ட செயலகம் முதலிடம் பெற்றதை முன்னிட்டு செயலகத்தில் உத்தியோகத்தர்கள் பராட்டப்பட்டதுடன் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

அரச துறை நிறுவனங்களுக்கான வினைத்திறனான சேவையை மதிப்பிடும் பொருட்டு தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தால் 2018/2019 ஆம் ஆண்டினை தழுவி நடத்தப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் போட்டித் தொடரில் தேசிய ரீதியில் யாழ். மாவட்ட செயலகம் முதலாம் இடத்தைப் பெற்றதை முன்னிட்டே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதீபன், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி) முரளீதரன், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், உற்பத்தித் திறன் பிரிவு அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உற்பத்தித்திறன் குழுவினருக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். (40)

# கஞ்சா, கெரோயினுடன் சந்தேக நபர் கைது

கல்லுண்டாய்ப் பகுதியில் கஞ்சா மற்றும் கெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, குறித்த பகுதியில் சட்ட விரோத போதைப்பொருள் வியாபாரம் இடம்பெறுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து குறித்த முற்றுகை இடம் பெற்றுள்ளது.

இதன் போது சந்தேக நபரிடம் இருந்து ஒரு கிலோ கஞ்சா 10 மில்லிகிராம் கெரோயின் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(75)

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் மூன்றாம் இடம்



முல்லைத்தீவு- மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான போட்டியில் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளது.

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் நடத்தப்படுகின்ற உற்பத்தித் திறன் விருது போட்டியில் பல்வேறு அரச திணைக்களங்கள் போட்டியிடுகின்றன இந்தநிலையில் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தி திறன் போட்டியில் முல்லைத்தீவு – மாந்தை கிழக்கு பிரதேச செயலகம் மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளது

அதாவது மிகவும் பின் தங்கிய போக்குவரத்து வசதிகள் இல்லாத பிரதேசத்தில் காணப்படுகின்ற மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் கடமை புரிகின்ற அரச உத்தியோகத்தர்கள் அன்றாடம் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் ஆளணி வெற்றிடம் மற்றும் பௌதிக வளப் பற்றாக்குறைகளுடன் மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கும் ஒரு பிரதேச செயலகமாக இது காணப்படுவதுடன் 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட 2020 ஆம் ஆண்டுக்கான தேசிய உற்பத்தித் திறன் போட்டியில் மூன்றாம் நிலையினை பெற்றுக் கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.(55)

# கொக்குளாய் பொலிஸ் நிலையம் திறந்து வைப்பு




முல்லைத்தீவு - கொக்குளாய் பகுதியில் பொலிஸ் காவலரணாக இயங்கி வந்த கொக்குளாய் பொலிஸ் நிலையம் புதிய கட்டடம் அமைக்கப்பட்டு பொலிஸ் நிலையமாக நேற்று வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலீஸ்மா அதிபரால் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.அமரசிங்க தலைமையில் நடைபெற்ற பொலிஸ் நிலைய திறப்பு நிகழ்வில் வடமாகாண சிரேஸ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ஜெகத் பளிக்கார சிறப்பு விருந்தினராக வருகை தந்து பொலிஸ் நிலையத்தினை திறந்துவைத்துள்ளார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி பொலிஸ் மா அதிபர் ஜே.எஸ்.வீரசேகர முல்லைத்தீவு மாவட்ட கடற்படை அதிகாரி,படை அதிகாரி,விமானப்படை அதிகாரி, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின்உதவி பிரதேச செயலாளர்,கிராமசேவையாளர் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டு சிறப்பித்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லை பிரதேசமாக காணப்படும் கொக்குளாய் பிரதேசம் திருகோணமலை, முல்லைத்தீவு மாவட்டத்தினை இணைக்கும் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது.

கொக்குளாய் பிரதேசத்தில் 1129 குடும்பங்களைச் சேர்ந்த 3432 மக்கள் வசித்துவருகின்றார்கள் 7 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய இந்த கிராமத்தில் கடந்த 2014 ஆம் ஆண்டு 09ஆம் மாதம் 18 ஆம் திகதி பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று குறித்த காவலரண் பொலிஸ் நிலையமாக உயர்த்தப்பட்டு அதற்கான கட்டடம் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

செம்மலை மேற்கில் இருந்து கொக்குளாய் வரையான பகுதியினை உள்ளடக்கிய பொலிஸ் நிலையமாக நிலையத்தின் பொறுப்பதிகாரி சிரான் பெரோரா தலையிலான பொலிஸ் நிலையம் மக்களுக்கான தனது முழுமையான சேவையினை வழங்கத்தொடங்கியுள்ளது.(15)

# 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு மூன்றாவது தடவை தடுப்பூசி வழங்கல் ஆரம்பம்



யாழ்ப்பாண மாவட்டத்தின் சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் நேற்று காலை முதல் ஆரம்பமாகி இடம்பெறுகிறது.

கொவிட்-19 தடுப்பூசிவழங்கல் திட்டத்தின் கீழ் 30வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும், 18 வயதிற்கு மேற்பட்ட பொருளாதார வளர்ச்சியில் முக்கியபங்கு வகிக்கும் தொழிலாளர்கள் மற்றும் நோய்பரவும் ஆபத்துள்ள மக்கள் தொகுதியினருக்கும் (தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் பணிபுரிவோர், சுகாதாரதுறை சாராத முன்னிலை ஊழியர்கள்) மேலதிகமாக மூன்றாவது தடவையாக( கோவிட்-19 தடுப்பூசியானது நேற்று முதல் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்று ஆகக்குறைந்தது மூன்றுமாத இடைவெளியின் பின்னர் இத் தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளலாம்.

இரண்டு தடவைகள் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக் கொண்டவர்களில் கோவிட்-19 தொற்றிற்கு உள்ளானவர்கள் அவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்ட நாளிலிருந்து 06 மாத கால இடைவெளியின் பின்னர ;இத் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளலாம்.

எனவே, மேற்குறிப்பிட்டவர்களில் சினோபாம் அல்லது ஏதாவது ஒரு கோவிட்-19 தடுப்பூசியை இரண்டு தடவைகள் பெற்றுக் கொண்டவர்கள் மட்டுமே தமது தடுப்பூசி அட்டையினை சமர்ப்பித்து தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளதோடு இத் தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதாரவைத்திய அதிகாரிபணிமனை மூலம் மக்களிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வகையில் மேற்குறிப்பிட்டவர்கள் அந்தந்த பிரதேசங்களிற்குரிய சுகாதாரவைத்திய அதிகாரி பணிமனைகளில் அல்லது அவர்களால் அறிவிக்கப்படும் நிலையங்களில் இன்றும் மற்றும் தடுப்பூசி அல்லது வேறு மருந்துகளிற்கு ஒவ்வாமை உடையவர்களுக்கு மார்கழி மாதம் 18 ஆம் திகதி முதல் பிரதி சனிக்கிழமைகளில் தடுப்பூசிவழங்குவதற்கு யாழ். மாவட்டத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் பருத்தித்துறை, ஊர்காவற்றுறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைகளிலும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகியமாவட்டங்களில் உள்ள மாவட்ட பொதுவைத்தியசாலைகளிலும் இத் தடுப்பூசிகள் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

30 வயதிற்குமேற்பட்டவர்களில் அவ்வாறான நிலைமைகள் இருப்பதாக சந்தேகிக்கப்பட்டு தடுப்பூசி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்பட்டவர்கள் தடுப்பூசி வழங்கும் நிலையத்தில் உள்ளவைத்திய அதிகாரியின் பரிந்துரைக் கடிதத்தைப் பெற்றுக் கொண்டு மேற்குறிப்பிட்ட வைத்தியசாலைகள் ஏதாவதுஒன்றில் தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பாதுகாப்பாக பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.(40)

# இலங்கைக்கு வந்த லிட்ரோ எரிவாயுவில் மீண்டும் சிக்கல்

## -இறக்க அனுமதியோம் என தெரிவிப்பு

இலங்கைக்கு நேற்று முன்தினம் கப்பலில் கொண்டுவரப்பட்ட லிட்ரோ காஸ் நிறுவனத்தின் சமையல் எரிவாயு உரிய தரத்தைக் கொண்டிருக்கவில்லையென தெரியவந்துள்ளது.

சமையல் எரிவாயுவின் வாசனையை அறிந்துகொள்ளும் பதார்த்தமான, எ(த்)தில் மேகெப்டனின் (Ethyl Mercaptan) அளவு 15க்கும் 17க்கும் இடையில் இருக்க வேண்டும் என்ற போதிலும், அதற்கும் குறைந்த மட்டத்திலேயே அது இருப்பதாக அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தியதில் தெரியவந்துள்ளது.

அதேநேரத்தில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி, ப்ரொப்பேன் மற்றும் பியூட்டேன் விகிதங்கள் 29க்கு 69 என்ற அடிப்படையில் இருப்பதாக நம்பகத்தன்மையான தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுயாதீன நிறுவனத்தின் பரிசீலனையின்படி, இந்த எரிவாயுவில் ப்ரொப்பேன் 33 சதவீதமாக இருப்பதென அறியக் கிடைக்கிறது.

இதேவேளை, உரிய தரமற்ற எரிவாயுவை தரையிறக்க அனுமதிக்கப் போவதில்லையென நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கைக்கு அமைய நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள எரிவாயு சரியானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைக்கு அமையவே தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

இலங்கை கனியவள கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்டுள்ள அறிக்கையை மாத்திரம்கொண்டு தீர்மானம் மேற்கொள்ள முடியாது. எ(த்)தில் மேகெப்டன் தொடர்பான அறிக்கை கிடைக்கப்பெற்றவுடனேயே இறுதி நிலைப்பாட்டை எடுக்க முடியும் என இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

## -காங்கேசன் சீமெந்து தொழிற்சாலையை-

# மூடிவிட்டு அதானி, அம்பானி இலங்கை அபிவிருத்தியையே செய்கிறார்கள்




நாட்டை அபிவிருத்தி செய்கிறோம் என இந்தியாவின் அம்பானி அதானி நிறுவனங்களுக்கு நாட்டை வழங்கி வரும் அரசாங்கம் யாழ்ப்பாணம் காங்கேசன் துறையில் உள்ள சீமெந்து தொழிற்சாலையை அப்படியே மூடி உள்ளது என ஜே.வி.பி.யின் தேசிய அமைப்பாளர் விமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கட்சி அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அரசாங்கத்தின் 16 வருட பிரதமர் ஆட்சியில் 12 ஆண்டுகள் ராஜபக்ச குடும்பமே பிரதமராக இருந்துள்ளனர். இதன்போது நாட்டின் அபிவிருத்தி, கிராம விருத்தி வீழ்ச்சியடைந்துள்ளன.

முஸ்லிம் காங்கிரஸ், ரிசாத் பதியுதீனின் கட்சி எதிர்க்கட்சி போல இருந்துகொண்டு அரசாங்கத்தின் வரப்பிரசாதங்களை பெறுகிறார்கள். மைத்திரிபால சிறிசேனவும் அப்படித்தான். அரசை விமர்சித்து கொண்டு அரசுக்கு ஆதரவு வழங்குகிறார்.

இவர்கள் ராஜபக்சவின் பின்னால் செல்கிறார்கள். இலங்கையில் உர பிரச்சினை இருக்கிறது மன்னார் பகுதியில் கீரி சம்பா அதிகம் விளையும் பிரதேசமாகும்.

அங்கு யூரியா இல்லை, ஆனால் 18 ஆயிரம் ரூபாய் செலுத்தி எப்படியோ சிலர் அதை பெறுகிறார்கள். உரம் இல்லாமையால் நெற்பயிர்கள் மஞ்சள் நிறமாக காட்சி அளிக்கின்றன

விவசாயிகள் வயலில் உழுது பண்படுத்தி தருமாறு கேட்கவில்லை. அவர்கள் தாமாகவே அனைத்தையும் செய்து உரத்தை கடைகளில் பெற்று நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுகின்றனர்.

ஜனவரி மாதத்தில் உரத்தை கொண்டு வருவதாக சொல்லப்பட்டுள்ளது. அதனால் விவசாயிகளுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

மன்னாரில் சீமெந்து தொழிற்சாலை அமைப்பதற்காக 2000 ஏக்கர் இருந்து வெளியேறுமாறு கூறப்பட்டுள்ளது. ஏற்கனவே காங்கேசன்துறையில் அமைக்கப்பட்ட சீமெந்து தொழிற்சாலை அப்படியே இருக்கிறது.

இந்தியாவை அபிவிருத்தி செய்ய முடியாத அதானி, அம்பானி குடும்பம் இலங்கையை எவ்வாறு அபிவிருத்தி செய்ய முடியும். இலங்கையில் பிடிபடும் இந்தியா ரோலர்களை விடுதலை செய்கிறார்கள்.

மாலைதீவில் பிடிபடும் இலங்கையை ரோலர்களை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் விடுவிக்க முடியுமா?

இந்திய ரோலர்கள் இலங்கை கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. அதுபோல இந்திய ரோலர்கள் பாகிஸ்தான் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட முடியுமா? வடக்கு மக்களுக்கென்று புகையிரதப்பாதை, விமான நிலையம் ஆகியவற்றை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் மக்கள் வாழ்வதற்கான காணிகள் விடுவிக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.(75)

# கொவிட் 19 தொற்றினால் 3 பிள்ளைகளின் தாய் பலி

கொவிட் 19 தொற்று காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தாய் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வசந்தபுரம் அராலி வீதி யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான கண்ணன் பத்மலோஜினி வயது 38 என்ற குடும்பபெண்ணே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 12 ஆம் தேதி காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். எனினும் அவர் இன்று காலை உயிரிழந்ததாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். உயிர் இழப்புக்கான காரணம் COVID 19 தொற்று என பிரேத பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. பிறப்பு விசாரணையினை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற் கொண்டார். சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.(48)

# சங்கானையில் வீடு புகுந்து வாள்வெட்டுக்குழு அட்டகாசம்

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கானை பகுதியில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் புகுந்த வாள்வெட்டு சமூக விரோதக் கும்பலைச் சோ்ந்தோர் வீட்டிலிருந்த சொத்துக்களை சேதப்படுத்திவிட்டு தப்பியோடி ஒழிந்துகொண்டனர். இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குறித்த வன்முறைக் கும்பல் வீட்டின் கதவுகள், முச்சக்கர வண்டி, மீன் தொட்டி, தண்ணீர் குழாய், கதிரைகள் மற்றும் வேலி தகரங்கள் என்பவற்றினை வாளினால் வெட்டி சேதப்படுத்தியது. அத்துடன், இக்கும்பல் முச்சக்கர வண்டிக்கு தீ மூட்டியுள்ளது. முச்சக்கர வண்டியினை மூடியிருந்த பொலித்தீன் எரிந்துகொண்டிருந்தவேளை வீட்டிலிருந்தவர்கள் அதனை உடனடியாக அணைத்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச-75)

# 'நான்காவது டோஸிற்கான தேவையும் ஏற்படலாம்'

## -அட்டை களை பாதுகாப்பாக வைத்திருங்கள்-

க.பிரசன்னா



கொவிட் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் தற்போது வழங்கப்பட்டாலும் எதிர் காலத்தில் நான்காவது டோஸ் வழங்கப்படுவதற்கான தேவை ஏற்படலாம். எனவே தடுப்பூசி அட்டைகளை பாதுகாப்பாக வைத்திருப்பது அவசியமாகுமென பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி அட்டையானது எடுத்துச் செல்வதற்கு ஏற்றவகையில் இல்லை. தடுப்பூசி தொடர்பான விபரங்கள் ஒரு தரவு தளத்தில் சேர்க்கப்படும் வரை மற்றும் கியூ.ஆர். குறியீடு அமைப்பு முறை அறிமுகப்படுத்தப்படும்வரை தற்போது வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி அட்டைகளை பாதுகாப்பாக பயன்படுத்த வேண்டும்.

எதிர்காலத்தில் கையடக்கத் தொலைபேசியின் ஊடாக இம்முறைமையினை பெற்றுக்கொள்ள முடியும். எனவே தடுப்பூசி அட்டையினை லெமினேட் செய்வதை தவிர்க்குமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பண்டிகை காலத்தினை முன்னிட்டு பொதுச் சுகாதார பரிசோதகர்களின் உதவியுடன் கொழும்பில் ஆறு இடங்களில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு காலப்பகுதியில் பொது மக்களின் செயற்பாடுகளில் பல விடயங்கள் தங்கியிருப்பதாக கொழும்பு மாநகரசபையின் வைத்திய அதிகாரி வைத்தியர் ருவான் விஜேமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பு, கோட்டை, புறக்கோட்டை, பொரளை மற்றும் வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் தரமற்ற உணவுப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் அபாயம் காணப்படுகின்றது. அவற்றை கண்காணிப்பதற்கு கொழும்பு வடக்கு, மத்திய கொழும்பு, பொரளை, கொழும்பு கிழக்கு மற்றும் கொழும்பு மேற்கு ஆகிய பகுதிகளில் ஆறு சுகாதார வைத்திய அதிகாரிகளின் மேற்பார்வையின் கீழ் குழுக்கள் இயங்கி வருகின்றன.

அத்துடன் முகக்கவசம் அணியாத நபர்களுக்கு துரித அன்டிஜென் பரிசோதனைகளை முன்னெடுக்கும் நடவடிக்கை கொழும்பு, கோட்டை மற்றும் புறக்கோட்டை போன்ற மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் இந்த வாரம் மீண்டும் தொடங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## -இலங்கை மேல் நீதிமன்ற சங்கத்தின்-


# உப தலைவராக நீதிபதி இளஞ்செழியன் தெரிவு



இலங்கை மேல் நீதிமன்ற சங்க உப தலைவராக நீதிபதி இளஞ்செழியன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மேல் நீதிமன்ற சங்க தேர்தல் நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் இடம்பெற்றுள்ளது. இத்தேர்தலில் நீதிபதி இளஞ்செழியன் சங்க உப தலைவராக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த இலங்கை மேல் நீதிமன்ற சங்க உப தலைவர் பதவி ஓராண்டு கால பதவி என்பதும் குறிப்பிடத்தக்கது.(21)

# சிறுவர் பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடல்



சாவகச்சேரி நகரசபையினரால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவரக்கூடிய விதத்திலான சிறுவர் பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப கட்டக் கலந்துரையாடலும்; கள விஜயமும் நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றது.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதனின் தலைமையில் நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ; சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்கள்,நலன்விரும்பிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சிறுவர் பூங்காவின் அமைவு தொடர்பாக பல்வேறுபட்ட தீர்மானங்களை எடுத்திருந்தனர்.

சாவகச்சேரி நகரசபையினரால் அண்மையில் நுணாவில் பகுதியில் இரண்டு கோடி 20 இலட்சம் ரூபாவில் கொள்வனவு செய்யப்பட்ட 29பரப்புக் காணியிலேயே சிறுவர் பூங்கா அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது.குறித்த சிறுவர் பூங்காவை வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்,இளைஞர்கள் மற்றும் முதியவர்கள் என சகலரையும் கவரும் விதத்தில் சில சில தனித்துவமான அம்சங்களை உள்ளடக்கி அமைக்க நகரசபையினர் எண்ணியுள்ளனர்.

தற்போது கொரோனா சூழ்நிலை காரணமாக சிறுவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை பலரும் தனிமை உணர்வை எதிர்கொள்வதாகவும்,அதனால் ஏற்படும் உள ரீதியான நெருக்கடிகளுக்கு சிறுவர் பூங்கா ஓர் சிறந்த தீர்வாக அமையும் என நகரசபையில் எடுத்த தீர்மானத்திற்கமைவாக பலருடைய நிதி உதவிகள் மற்றும் ஒதுக்கீடுகளையும் எதிர்பார்த்து சிறுவர் பூங்கா அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை சாவகச்சேரி நகரசபையினர் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ஆரம்ப கட்ட கலந்துரையாடலைத் தொடர்ந்து கூட்டத்தில் கலந்துகொண்டோர் நுணாவிலில் அமைந்துள்ள சிறுவர் பூங்கா காணிக்கும் விஜயம் ஒன்றினையும் மேற்கொண்டிருந்தனர்.(13)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 16 * 05 * 1947 | மறைவு 11 * 12 * 2021



அமரர்

## கதிரேசு காராளசிங்கம்

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியை திருமதி.பூநீதேவி ஜெயராஜன் அவர்களின் தந்தை கதிரேசு காராளசிங்கம் அவர்கள் கடந்த 11.12.2021 அன்று இறையடி சேர்ந்தார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்



# பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 07-12-1930 | மறைவு 14-12-2008

"கலைமாமணி"

## அமரர் அண்ணாமலை மகாதேவன்

Retd.Eng.Sp.Trained Teacher,
London Kensington Hons, Cert.in.Drawing

எங்கள் நினைவுகளில் இருந்து நீங்கா உமக்கு எம் உதிரும் கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"லக்ஷ்மி",
வதிரி.

குடும்பத்தினர்.



# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 20 * 02 * 1945 | மறைவு 11 * 12 * 2021



அமரர்

## முருகேசு சின்னத்தம்பி

யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயத்தில் கற்பிக்கும் ஆசிரியர் திரு.லோகதாஸ் அவர்களின் மாமனார் முருகேசு சின்னத்தம்பி அவர்கள் கடந்த 11.12.2021 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்



# சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் 45 வயது நபருக்கு உறுப்புமாற்று சிகிச்சை செய்வதற்கு O+ அல்லது O- குருதி வகையைச் சேர்ந்த சிறு நீரகம் உடனடியாகத் தேவை. உதவுபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப் படும்.

தொடர்புகளுக்கு:
0776203932/ 0763221975

# இலங்கை அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக மஹேல நியமனம்



இலங்கை தேசிய அணியின் பயிற்றுவிப்பு ஆலோசகராக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜெயவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

2022 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் இந்த நியமனம் அமுலுக்கு வரும் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இலங்கை அணியுடன் மஹேல ஜெயவர்தன இணைவதில் தாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவதாக இலங்கை கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி கூறியுள்ளார்.

2021 ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ண இருபதுக்கு இருபது தொடரின் தகுதி சுற்று போட்டியில் அவரது பங்களிப்பே அணியின் முன்னேற்றத்துக்கு காரணம் என்றும் அவர் கூறியுள்ளார்.

புதிய நியமனம் இருந்தபோதிலும் அடுத்த ஆண்டு மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கிண்ண அணியில் தொடர்ந்து தனது பங்களிப்பை வழங்குவார் என்றும் அவர் கூறினார்.

# பர்முயுலா-1 முதல் முறையாக சம்பியனானார் வெர்ஸ்டபேன்



நடப்பு ஆண்டுக்கான பர்முயுலா-1 கார்பந்தயத்தின் இறுதி சுற்றில், முதலிடம் பிடித்ததன் மூலம் ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன் முதல் முறையாக சம்பியன்ஷிப் பட்டத்தை வென்றுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் பார்முயுலா-1 கார் பந்தயம், 22 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் இறுதி சுற்றான அபுதாபி கிராண்ட் பிரிக்ஸ், யாஸ் மெரினா சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 306.183 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப் பாய்ந்தனர்.

இதில் ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டபேன், பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் 17.345 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 26 புள்ளிகள் வழங்கப்பட்டது.

அவரை விட 2.256 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, மெசிடஸ் பென்ஸ் அணியின் வீரரான லீவிஸ் ஹெமில்டன், இரண்டாவது இடத்தை பெற்றார். அத்தோடு அவர், இரண்டாம் இடத்திற்கான 18 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார்.

5.173 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, பெர்ராரி அணியின் வீரரான கார்லோஸ் செய்ன்ஸ் மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் வழங்கப்பட்டது.


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## பொதுமக்களுக்கான அறிவித்தல்

பின்வருவன ஊடாக நீங்கள் பெற்றுக்கொண்ட வெளிநாட்டு நாணயத்தை உங்கள் உடமையில் வைத்திருப்பீர்களாயின்…

I. வெளிநாட்டு பயணத்திற்காக வங்கியொன்றிலிருந்து அல்லது அதிகாரமளிக்கப்பட்ட நாணயமாற்றுநரிடமிருந்து கொள்வனவுசெய்து, பயன்படுத்தாது இலங்கைக்கு திருப்பிக் கொண்டுவரப்பட்டவை (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

II. வெளிநாட்டு பயணத்திற்காக தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து (PFCA) மீளெடுப்புச்செய்தல் (ஐ.அ.டொலர் 15,000 வரை அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக),

III. வெளிநாட்டிலிருக்கும் போது தொழில், தொழில்சார்நிபுணத்துவம் அல்லது வியாபாரம் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை,

IV. சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடுவதற்காக 2020 சனவரி 01 அன்று அல்லது அதற்கு பின்னர் பெற்று இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவை.

அத்தகைய வெளிநாட்டு நாணயங்களை நீங்கள்,

- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியில் இலங்கை ரூபாவாக மாற்றலாம்; அல்லது
- 2021 திசம்பர் மாத காலப்பகுதியில் ஐ.அ.டொலரொன்றுக்கு இலங்கை ரூபா 210* ற்கு (அல்லது வேறு நாணயத்தில் அதற்குச் சமமாக) ஏதேனும் வங்கியிலுள்ள இலங்கை ரூபா கணக்கில் வைப்பிலிடலாம்; அல்லது
- உங்களது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கில் (PFCA) அல்லது சிறப்பு வைப்புக் கணக்கில் (SDA) வைப்பிலிடலாம்;
- உங்களது வங்கியூடாக இலங்கை அபிவிருத்தி முறிகளில் முதலீடு செய்யலாம்.

* செலாவணி வீதம்: ரூ.200 + விசேட ஊக்குவிப்பு ரூ.10

குறிப்பு: இலங்கை மத்திய வங்கி மூலம் மேற்குறித்தவை தொடர்பிலான அவசியமான அறிவுறுத்தல்கள் அனைத்து வங்கிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
0112477255 | 0112477716 | dfe@cbsl.lk | www.dfe.lk


-இலங்கை மெய்வல்லுநர் தரம் 1 இற்கான-

# நடுவர் பரீட்சையில் பரீட்சையில் யாழைச் சேர்ந்த 8 பேர் சித்தி



இலங்கை மெய்வல்லுநர் தரம் 1 இற்கான நடுவர் பரீட்சையில் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 8 பேர் உட்பட தமிழ் மொழி மூலமான பரீட்சாத்திகள் உட்பட 11 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான பரீட்சை அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.திருமாறன், ந.சுதேஸ்குமார், சி.வசந்தகுமார், சி.பாணுராஜா, வை.சிவகுமார், ஜே.ஜெயகாந், பி.பிரதீபன், ரி.திவாகர் ஆகியோரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த சி.சிவபரன், ரி.பிர சாத், எஸ்.மயூரன் ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர். (21)

# யாழ்.பெண்கள் கபடி அணி வடக்கு மாகாண சம்பியன்



வடமாகாண பெண்களுக்கான கபடிப் போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் அணி சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி பொது உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் யாழ்.மாவட்ட அணியை எதிர்த்து கிளிநொச்சி மாவட்ட அணி மோதியது. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிருபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இருப்பினும் ஆட்ட நேர முடிவில் யாழ்.மாவட்ட பெண்கள் அணி 46:40 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தை தமதாக்கிக் கொண்டனர். (21)

-மரதன் ஓட்டப் போட்டியில் தங்கம்-

# ஆண்கள் பிரிவில் தரங்க பெண்கள் பிரிவில் இரேஷா



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் கொழும்பிலிருந்து களுத்துறை வரையிலான 33 ஆவது தேசிய இளையோர் மரதன் ஓட்டப் போட்டியில் தரங்க ஹலபகேவும், கொழும்பிலிருந்து மொரட்டுவை வரையிலான பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியில் இரேஷா பெர்னாண்டோவும் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றனர்.

நேற்று முன்தினம் கொழும்பு காலி முகத்திடத்திலிருந்து களுத்துறை மாவட்ட செயலகம் வரையிலான மரதன் ஓட்டப் போட்டியில் மாத்தறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றிருந்த தரங்க ஹலபகே முதலிடம் பிடித்தார்.

இவர் போட்டித் தூரத்தை 2 மணித்தியாலங்கள் 37 நிமிடங்கள் 39 செக்கன்களில் நிறைவு செய்தார்.

கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்த ஷேஷன் மாலக்க 2 மணித்தியாலங்கள் 39 நிமிடங்கள் 39 செக்கன்களில் நிறைவு செய்து இரண்டாமிடத்தைப் பிடித்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.மேலும் களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்திருந்த நிரோஷ் அஞ்சுல 2 மணித்தியாலங்கள் 52 நிமிடங்கள் 08 செக்கன்களில் நிறைவு செய்து மூன்றாமிடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்த இரேஷா பெர்னாண்டோ பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப் போட்டியை 1 மணித்தியாலமும் 32 நிமிடங்கள் 37 செக்கன்களில் நிறைவு செய்து முதலிடம் பிடித்து தங்கம் பதக்கம் வென்றார். இப்போட்டியில் 1 மணித்தியாலமும் 34 நிமிடங்கள் 30 செக்கன்களில் நிறைவு செய்த கம்பஹா மாவட்டத்தின் கயானி புத்திகா இரண்டாமிடத்தைப் பிடித்து வெள்ளிப் பதக்கத்தையும், மாத்தறை மாவட்டத்தின் ஹிருணி தில்மினி 1 மணித்தியாலமும் 38 நிமிடங்கள் 47 செக்கன்களில் நிறைவு செய்து மூன்றாமிடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.

இதேவேளை, மரதன் ஓட்டப் போட்டியில் பங்கேற்றிருந்த நுவரெலியாவைச் சேர்ந்த சில்வெஸ்டர் தோமஸ் சார்ள்ஸ் 6 ஆவது இடத்தையும் (3மணி 46 நிமி.51 செக.), பாலவிக்கேஷ்வரன் செல்வகுமார் 7 ஆவது இடத்தையும் (4மணி 01 நிமி. 27 செக.), மன்னாரைச் சேர்ந்த அருளாசன் தமிழ் வேந்தர் 10 ஆவது இடத்தையும் (4 மணி 11 நிமி. 49 செக.) பிடித்தனர். பெண்களுக்கான அரை மரதன் ஓட்டப்போட்டியை 1 மணித்தியாலம் 54 நிமிடங்கள் 32 செக்கன்களில் நிறைவு செய்த நுவரெலியாவைச் சேர்ந்த மோசஸ் ராகினி 9 ஆவது இடத்தைப் பிடித்தார்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# நாடு அதளபாதாளத்திற்குள் விழும் நிலையிலுள்ளது

## -கூறுகிறார் நளின் பண்டார-



எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாடு அதளபாதாளத்திற்குள் விழும் நிலை உள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்படுமானால் அதற்கு தற்போதைய அரசாங்கம் முழு பொறுப்பையும் ஏற்க வேண்டும் எனவும் அவர் கூறினார்.

நுவரெலியா - வலப்பனையில் நேற்று விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின் மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

'சரியான விவசாய ஆலோசனைகளை வழங்க முடியாதவர்களே ஜனாதிபதியுடன் உள்ளனர். சேதன பசளை பாவனைக்கு நாம் எதிரானவர்கள் அல்ல.

ஆனால் இது நடைமுறைப்படுத்தப்பட்ட முறையே தவறானது என்கிறோம். தற்போது அவர்கள் இது தொடர்பில் பிறப்பித்த வர்த்தமானி முன்பு போல் வாபஸ் பெறப்பட்டுள்ளது. எனினும் பெரும்போகச் செய்கை தற்போதைய நிலையில் பாதிக்கப்பட்டுள்ளது.

அப்படியானால் நெல் உற்பத்தியாளர்களின் பொருளாதாரம் பூச்சியமாக மாறும். மரக்கறி உற்பத்தியும் அப்படிதான். விளைச்சல் குறைவடைந்ததன் காரணமாகவே மரக்கறிகளின் விலை உயர்ந்துள்ளது.

தேயிலை உற்பத்தியும் அவ்வாறுதான். எமது தேயிலை வெளிநாடுகளுக்கே அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

எனவே இவர்களின் செயற்பாடுகளால் தேயிலை உற்பத்தியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஜனாதிபதியுடன் இருக்கும் ஒரு சில மனநலம் குன்றியவர்களின் ஆலோசனைகளே காரணம்.

எனவே எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நாட்டில் உணவு தட்டுப்பாடு ஏற்படக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

ஆகவே எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் தற்போதைய அரசாங்கம் வெடித்து சிதறும் என்பதே உண்மை என்றார்.

# மக்களுக்கு பொய் கூற விரும்பவில்லை

## -அமைச்சர் பந்துல குணவர்தன-



நான் மக்களுக்கு பொய் கூறி என்னை சிறுமைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றின் போது அத்தியாவசிய உணவுப்பொருட்களின் விலைகள் வெகுவாக அதிகரித்துள்ள நிலையில் அதனைக் குறைப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அவர்,

நான் மக்களுக்கு பொய் கூறி என்னை சிறுமைப்படுத்திக் கொள்ள விரும்பவில்லை. விலைகளை என்னால் குறைக்க முடியும் என்றால் நான் குறைக்காமல் இருப்பேனா? என்று கேள்வி எழுப்பியுள்ளார். இதேவேளை, எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதி வரை அரிசி உள்ளிட்ட 50 அத்தியாவசிய பொருட்களை சதொச மூலம் குறைந்த விலையில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## FACULTY OF TECHNOLOGY, UNIVERSITY OF JAFFNA

### WALK – IN – INTERVIEW

Walk in Interview for appointments to the following posts will be held on **28.12.2021 at 9.30 a.m at the Board Room of Faculty of Agriculture, Kilinochchi Premises, University of Jaffna.**

- Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in **Engineering Technology:** Construction Technology/Electro Technology/Automobile Technology
- Temporary Assistant Lecturer / Temporary Demonstrator in **Biosystems Technology:** Food Production Technology/Commercial Green Farming Technology
- Temporary Assistant Lecturer/Temporary Demonstrator in **Interdisciplinary Studies:** Information and Communication Technology/Physics/Mathematics/ Statistics /related fields

For detailed information on qualifications and salary, please refer to **www.jfn.ac.lk.**

13.12.2021.

Registrar,
University of Jaffna.

# மூன்று பிரதான சூழ்ச்சிக்காரர்களை அரசிலிருந்து வெளியேற்ற வேண்டும்

## -கோருகிறார் ரொஷான் ரணசிங்க-



2015 ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சி செய்தவர்கள் தற்போது அரசாங்கத்தில் இருந்துக் கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்த முயற்சிக்கிறார்கள். அந்த மூன்று பிரதான சூழ்ச்சிக்காரர்களை அரசாங்கத்திலிருந்து வெளியேற்ற வேண்டும் என்பதை பலமுறை பகிரங்கமாக அறிவித்துள்ளேன் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

பொலன்னறுவை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

அரசாங்கத்தில் இருந்துக் கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளை கூட்டணியின் பங்காளி கட்சியினர் முன்னெடுக்கிறார்கள். அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணாக செயற்படுபவர்களுடன் இணைந்து செயற்படுவது கடினமானது.

2015ஆம் ஆண்டு அரசியல் சூழ்ச்சியை முன்னெடுத்தவர்கள் தற்போது அரச வரபிரசாதங்களை முழுமையாக அனுபவித்துக் கொண்டு அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் வகையில் மக்கள் மத்தியில் கருத்துரைக்கிறார்கள்.

அரசாங்கத்திற்குள் உள்ள மூன்று பிரதான அரசியல் சூழ்ச்சிக்காரர்களை வெளியேற்ற வேண்டும் என்பதை பலமுறை பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளேன். கொவிட் தாக்கத்தின் பின்னரான பொருளாதார பாதிப்புக்களினால் ஏற்பட்டுள்ள சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் அரச நிர்வாகத்தை முன்னெடுத்துள்ளது.

செயற்பாட்டு ரீதியில் ஏற்பட்ட குறைபாடுகளை அடிப்படையாக வைத்து அதனூடாக அரசியல் இலாபம் தேடிக் கொள்ள அரசாங்கத்தில் உள்ள ஒரு தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திர பொதுஜன பெரமுன கூட்டணியில் உள்ள பங்காளி கட்சியினர் அரசாங்கத்தில் காணப்படும் பிரச்சினைகளுக்கு உள்ளக பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. இடம்பெறவுள்ள தேர்தல்களில் விருப்பு வாக்கினை அதிகளவில் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணாக செயற்படுகிறார்கள்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட ஏனைய பங்காளி கட்சியினர் அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க செயற்பட முடியாவிடின் கூட்டணியில் இருந்து தாராளமாக வெளியேறலாம் என பலமுறை பகிரங்கமாக குறிப்பிட்டுள்ளோம்.

அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டு தொடர்ந்து அரசாங்கத்துடன் ஒன்றிணைந்துள்ளார்கள் என்றார்.

## Extension of Bid Closing Date University of Jaffna, Sri Lanka

**Ministry of Education**

**Accelerating Higher Education Expansion and Development (AHEAD) Operation Credit Number/Grant: IDA 6026 LK Supply, Delivery, Installation, Commissioning & Maintenance of Desktop Computer.**

**AHEAD/RA2/IT/JFN/ARTS/GOODS/3**

Reference to the Invitation for Bids, published on 19th November 2021 in the Daily News, Dinamina and Thinakkural newspapers for Desktop Computers - 100 Nos, the date of submission Bids extended to 23rd December 2021 at 2 PM due to the changes in the Technical specification.

**Please refer Jaffna University Website (www.jfn.ac.lk) for the amended specification.**

Telephone: 0212214547,
email - ots@univ.jfn.ac.lk

The Vice Chancellor,
University of Jaffna,
Thirunelvely, Jaffna.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடம்

### நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறி - 2021/2022 (அணி - V)

முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தினால் நடாத்தப்படும் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

கற்கைநெறிக்கான காலம் – ஒரு வருடம் (வார இறுதி நாட்கள்)
கற்பிக்கப்படும் மொழி – தமிழ்
விண்ணப்பிப்பதற்கான தகுதி – க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களிலும்சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.
கற்கைநெறிக்கான கட்டணம் – ரூபா. 33,250/=

<u>கட்டண விபரம் :</u>

| | |
|---|---|
| பதிவுக்கட்டணம் | - 2,500.00 |
| கல்விக் கட்டணம் | - 25,000.00 |
| பரீட்சைக் கட்டணம் | - 5,000.00 |
| நூலகக் கட்டணம் (திரும்பப் பெறத்தக்கது) | - 750.00 |
| மொத்தம் | - 33,250.00 |

**விண்ணப்ப முடிவுத் திகதி - 31.12.2021**

விண்ணப்பப் படிவத்தினை பெறும் முறை: விண்ணப்பப்படிவத்தினை http://www.maco.jfn.ac.lk/ என்ற இணையத்தள முகவரியூடாக தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பிக்கும் முறை : எந்தவொரு மக்கள் வங்கிக்கிளையிலும் (கணக்கிலக்கம் - 050052020001509) விண்ணப்படிவத்திற்கான கட்டணமாக ரூபா 300 ஐ செலுத்தி, தரவிறக்கம்செய்து பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பற்றுச்சீட்டினை இணைத்து உதவிப்பதிவாளர், முகாமைத்துவக்கற்கைகள் மற்றும் வணிகபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 10ம் ஒழுங்கை, கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பப்படல்வேண்டும். (மாதிரி வைப்புச்சீட்டினை http://www.maco.jfn.ac.lk எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்). கடிதஉறையின் இடதுபக்க மேல்மூலையில் நுண்நிதியியல் டிப்ளோமா கற்கைநெறிக்கான விண்ணப்பம் - 2021/2022 (அணி - V) எனக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 021 222 3610 http://www.maco.jfn.ac.lk

பதிவாளர்,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

## காரைநகர் பிரதேசசபை வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவுசெய்தல் - 2022

2022ம் ஆண்டு காரைநகர் பிரதேசசபைக்குத் தேவையான கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருட்களை விநியோகிக்க, சேவைகளை வழங்க ஆர்வமுள்ள அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள்/ உள்ளூர் முகவர்கள்/ வழங்குநர்கள்/ சேவை வழங்குநர்களிடமிருந்தும் ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| உருப்படி இலக்கம் | விபரம் - பொருட்கள் |
|---|---|
| 1 | அனைத்து அலுவலக எழுதுபொருட்கள், அச்சிடப்பட்ட எழுது பொருட்கள், படிவங்கள் மற்றும் ஆவணங்கள் வழங்கல். |
| 2 | அனைத்து அச்சிடல் நடவடிக்கைகள். |
| 3 | கணனிகள், கணனி மென்பொருட்கள், Toner வகைகள். |
| 4 | நிழற்பிரதி எடுக்கும் இயந்திரம், அவற்றுக்கான உதிரிப்பாகங்கள். |
| 5 | சுகாதார சேவைப்பொருட்கள் மற்றும் தடுப்புக்காப்பு உபகரணங்கள். |
| 6 | மின்சார உபகரணங்கள் மற்றும் வீதி விளக்கு உபகரணங்கள். |
| 7 | நூலகங்களுக்கான நூல்கள். |
| 8 | நீர் வழங்கும் குழாய்கள்,கிழும் பைப்கள் மற்றும் ஏனைய பொருட்கள் |
| 9 | வாகன உதிரிப்பாகங்கள்,துணைப்பொருட்கள் |
| 10 | மின் வழங்கும் பொருட்கள், மின் பாவனைப் பொருட்கள் |
| 11 | வாகனங்களுக்கான ரயர் ரியூப் மற்றும் மின்கலங்கள். |
| 12 | தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள்(மரம்/உருக்கு) |

| உருப்படி இலக்கம் | விபரம் - சேவைகள் |
|---|---|
| 13 | அச்சிடுதல், பெயர்ப்பலகை, பனர்கள், ஞாபகார்த்த பலகை தயாரித்தல் |
| 14 | வாகனங்களுக்கான அனைத்து வகையான சுத்திகரிப்பு (Service) |
| 15 | கணனி, தட்டச்சு பொறி, பக்ஸ் இயந்திரம், நகல் பிரதி இயந்திரம் திருத்தம், சுத்திகரிப்பு |
| 16 | உள்ளக தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதி வழங்கல், பராமரிப்பு |
| 17 | சகல வாகனங்களுக்குமான திருத்த வேலைகள் |
| 18 | இறப்பர் முத்திரை தயாரித்தல். |
| 19 | பாவிக்கப்பட்ட பத்திரிகை, பழைய இரும்பு கொள்வனவு செய்தல் |
| 20 | அலுவலக மரத்தளபாடங்களை பழுது பார்த்தல்(பின்னுதல்,பொலிஷ்) |

| உருப்படி இலக்கம் | விபரம் - ஒப்பந்த வேலைகள் (ICTADபதிவு உள்ளவர்கள் மட்டும்) |
|---|---|
| 21 | கட்டட நிர்மாண வேலைகள் |
| 22 | கிணறு, குழாய் கிணறு அமைத்தல் |
| 23 | வீதி நிர்மாண, திருத்த வேலைகள் |

<u>நிபந்தனைகள்</u>

1. வழங்குநர்களாக பதிவு செய்தல் 2022ம் ஆண்டிற்கு மட்டுமே செல்லுபடியானதாகும்.
2. அனைத்து விண்ணப்பதாரர்களும் பதிவு செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொரு உருப்படிக்குமாக வெளிவேறாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் அத்துடன் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வோர் ஒவ்வொரு விடயத்திற்கும் தனித்தனியாக ரூபா500.00 மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாகவும் ஒப்பந்த வேலைகளுக்கு ரூபா 1000.00 மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணமாக காசாக செலுத்தப்பட வேண்டும். மேலும் அனைத்து விண்ணப்பங்களும் ஒரே தபாலுறையில் சேர்த்து அனுப்பி வைக்கப்பட வேண்டும். படிவங்களை அலுவலக நேரங்களில் காரைநகர் பிரதேசசபையில் பெற்றுக்கொள்ளலாம்.
3. விண்ணப்பங்கள் இடப்பட்டு அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2022" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் தவிசாளர், காரைநகர் பிரதேசசபை, காரைநகர் எனும் முகவரிக்கு **28.12.2021**ம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
4. பதிவுக்காக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களை எதுவித காரணங்களும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்குமான உரிமையை தவிசாளர் கொண்டுள்ளார்.
5. பொதுவாக பதிவு செய்து கொள்ளப்பட்ட வழங்கல்கள், சேவை வழங்கல்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை மனு கோரப்பட்டு பண்டங்கள் சேவைகள், வேலைகள் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் ஒப்பந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் தேவைப்படும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் கிடைக்காதபட்சத்தில் புறம்பாக வெளி நிறுவனங்களிடமிருந்தும் விலை மனுக்கோரி கொள்வனவு மேற்கொள்வதற்கும் மற்றும் ஒப்பந்தம் வழங்கும் உரிமை என்பன காரைநகர் பிரதேசசபை தவிசாளருக்குரியதாகும்.
6. விலை மனுக்கோரும்போது முன்வராத, கட்டளைகளுக்காக குறித்த நேரத்திற்கு பண்டங்களை வழங்காத, சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகளின் பிரகாரம் பண்டங்களை வழங்காத, வழங்குநர்களின் பெயர்கள் முன்னறிவிப்புக்கள் இன்றி பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

14.12.2021

ம.அப்புத்துரை
தவிசாளர், காரைநகர் பிரதேச சபை.
தொலை பேசி இல:-0212251735

# 13 ஐ அமுல்படுத்தி தமிழ் மக்களின் மனங்களை வென்று காட்டுங்கள்

## -அரசுக்கு சவால் விடும் மனோ கணேசன்-

அரசியல் அமைப்பில் இருக்கும் 13 ஆம் திருத்த சட்டத்தையாவது முதல் கட்டமாக அமுல்படுத்தி காட்டுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் வலியுறுத்தினார்.

அதேபோல் 13 ஆம் திருத்த சட்டத்தை அமுல்படுத்தி தமிழ் பேசும் மக்களின் மனங்களையும் இதயத்தையும் வென்று காட்டுங்கள் எனவும் அரசாங்கத்திற்கு அவர் சவால் விடுத்தார்.

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடந்த தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சி தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இணைந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஈழத்தமிழ் மக்களையும், மலையக தமிழ் மக்களையும், முஸ்லிம் மக்களையும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களாகிய நாம், தமிழ் மக்களின் பிரதான பிரச்சினைகள் குறித்து எம்மத்தியில் சிரேஷ்ட தலைவராக உள்ள சம்பந்தன் ஐயாவின் தலைமையில் கூடி ஆராய்ந்துள்ளோம்.

இதன்போது 13 ஆம் திருத்தம் குறித்தே அதிகமாக பேசப்பட்டது. ஆனால் 13 ஆம் திருத்த சட்டம் தமிழ் மக்களின் இறுதி அரசியல் இலக்காக கருதப்படவில்லை. 13 ஆம் திருத்தம் குறித்து நாம் விசேடமாக கோரிக்கை விடவேண்டிய அவசியம் இல்லை. இது இலங்கை அரசியல் அமைப்பிற்குள் இருக்க வேண்டிய ஒரு சட்டமாகும். இதனை அமுல்படுத்தி காட்டுங்கள் என்பதே எமது கோரிக்கையாகும். 13 ஆம் திருத்த சட்டத்தை அமுல்படுத்தி தமிழ் பேசும் மக்களின் மனங்களையும் இதயத்தையும் வென்று காட்டுங்கள் என்பதே அரசாங்கத்திற்கு நாம் விடுக்கும் சவாலாகும்.

தமிழ் மக்களின் ஒரேயொரு அதிகார பரவலாக்கல் சட்டமாக அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டுள்ள இந்த சட்டம் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மூலமாகவே உள்ளே நுழைந்தது. ஆகவே, இந்திய அரசாங்கத்திற்கும் இதனை வலியுறுத்தும் பிரதானமான கடப்பாடு இருகின்றது. கட்சிகள் வேறுபட்டாலும் இந்திய -அரசாங்கத்திற்கு இது குறித்த கடமைப்பாடு உள்ளது. அதேபோல் உலக நாடுகளுக்கும் இது குறித்த கடப்பாடு உள்ளது.

தேசிய பிரச்சினை உக்கிரமடைந்து அதன் மூலமாக கொடுமையான யுத்தம் இடம்பெற்ற வேளையில் உலக நாடுகள் ஒன்றுகூடி இந்தியாவும் சேர்ந்து இலங்கை அரசாங்கத்திற்கு அதிகமாக உதவிகளை செய்தனர். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வுகள் வழங்கப்படும் என்ற செய்தியை அவர்கள் முன்வைத்திருந்தனர்.



ஆனால் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 12 ஆண்டுகள் பூர்த்தியாகும் இன்றுவரை ஒன்றுமே நடைபெறவில்லை. ஆகவே இது குறித்த நியாயமான கோபம் எம்மிடம் உள்ளது. அதன் வெளிப்பாடே இதுவாகும்.ஆகவே இந்தியாவிற்கும், உலக நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நாம் கூறுவது என்னவென்றால், அரசியல் அமைப்பில் இருக்கும் இந்த சட்டத்தையாவது முதல் கட்டமாக நீங்கள் அமுல்படுத்தி காட்டுங்கள் என கூறுகின்றோம். இந்த கோரிக்கையில் 13ஆம் திருத்தமே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் மொழி உரிமை, குடிப்பரம்பல் அழிப்பு, தேசிய ஒருமைப்பாடு குறித்தும், முஸ்லிம் மக்களின் மீதான தாக்குதல்கள், இன கலாசார அங்கீகாரம், மலையக மக்களின் குடியுரிமை குறித்தும், பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட பல தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் இன்றும் சிறையில் உள்ளனர். யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 12 ஆண்டுகள் முடிந்துள்ள நிலையிலும், யுத்தத்தில் ஈடுபட்ட பலர் இன்று அரசாங்கத்தில் அமைச்சர்களாகவும் எம்.பிக்களாக உள்ள நிலையில் அவர்களால் ஆணையிடப்பட்டு சிறு சிறு வேலைகளை செய்த பலர் சிறைக்குள் வாடிக்கொண்டுள்ளனர். அவர்கள் நிபந்தனையின்றி விடுவிக்கப்பட வேண்டும்.11 இளைஞர்களை கொழும்பில் கடத்தியதாக முன்னாள் கடற்படை தளபதிக்கு, அவர் சம்பந்தமான வழக்கு விசாரணைகளை வாபஸ் பெற்றுக்கொள்ள முடியும் என்றால், மிருசிவில் படுகொலையில் ஈடுபட்ட குற்றத்தில் தண்டனை வழங்கப்பட முன்னாள் இராணுவ வீரருக்கு மன்னிப்பு வழங்க முடியும் என்றால் ஏன் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்க முடியாது. பிரியந்த குமார்விற்கு எதிராக நடவடிக்கை எடுக்க பாகிஸ்தானை கேட்கும் நீங்கள் இலங்கை தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு எதிராக அநியாயம் செய்தவகளுக்கு ஏன் நடவடிக்கை எடுக்க தயங்குகின்றீர்கள் என்பதே எமது கேள்வியாகும் என்றார்.

# அதிகார பரவலாக்கலை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே தமிழர்களை

## பாதுகாக்க இருக்கும் ஒரே வழி -ஹக்கீம்-



ஜனாதிபதி செயலணி என்ற பெயரில் சிறுபான்மை மக்களுக்கு எதிராக மத்திய அரசாங்கம் எடுக்கும் கபளீகர செயற்பாடுகளை முழுமையாக முடிவுக்கு கொண்டுவர வேண்டுமாயின், அரசியல் அமைப்பில் உள்ள அதிகார பகிர்வு விடயங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹகீம் வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு வெள்ளவத்தை குளோபல் டவர் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடந்த தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சி தலைவர்கள் ஒன்றிணைந்து நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இணைந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மாகாண சபைகள் இயங்காதுள்ள தருணத்தை தமக்கு சாதகமாக பயன்படுத்தி, ஜனாதிபதி செயலணி என்ற போர்வையில் மத்திய அரசாங்கம் பல்வேறு செயலணிகளை அமைத்து சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாது செய்வதற்கு எத்தனிக்கும் கபளீகர நடவடிக்கைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றால் அரசியல் அமைப்பில் உள்ள அதிகார பகிர்வு விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்கு தேர்தல் முறைமையில் இருக்கின்ற மாற்றத்தை ஒரு சாட்டாக கூறிக்கொண்டு தேர்தலை இழுத்தடிப்பு செய்வதை இனியும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோல் ஆளுநர்களின் தலைமையில் மாகாண ஆட்சியை நடத்திக்கொண்டு அதன் மூலமாக அரசாங்கதின் திட்டமிட்ட மறைமுக நிகழ்ச்சி நிரலை சிறுபான்மை சமூகத்திற்கு பாதிப்பாக நடைபெறுகின்ற விடயங்களிலும் நாம் கவனம் செலுத்தியுள்ளோம்.

அதன் அடிப்படையில் சிறுபான்மை சமூகம் எதிர்நோக்கும் சவால்களை குறித்து நாட்டின் சகல கட்சிகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் அதேவேலை, 13 ஆம் திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இந்திய தலைமைகளுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் சரிவர நிறைவேற்றப்படுவதில் தாமதம் இருக்கின்றது. எனவே,இவற்றையெல்லாம் தாமதப்படுத்தாது அமுல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றோம் என்றார்.


# மன்னார் கோந்தைப்பிட்டி கடலில் மூழ்கி இருவர் மாயம்

மன்னார் கோந்தைப்பிட்டி கடலில் மூழ்கி இருவர் காணாமல்போயுள்ள நிலையில், அவர்களை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

யாழ்.பருத்தித்துறையைச் சேர்ந்த தூண்டல் தொழிலாளர்கள் மூவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஒரு படகில் பயணித்துள்ளனர்.

மன்னார் பள்ளிமுனை கடல் பகுதியில் வைத்து படகின் இயந்திரம் பழுதானதால் ஒருவர் கடலில் இறங்கியுள்ளார்.

கடலில் இறங்கிய வரை கடல் இழுத்துச் சென்றுள்ளது. கடல் இழுத்துச் செல்லும் நபரை காப்பாற்ற இறங்கியவரையும் கடல் இழுத்துச் சென்றுள்ளது என தெரிய வந்துள்ளது.



படகில் இருந்த ஒருவர் மட்டுமே பள்ளிமுனை மீனவர்களால் காப்பாற்றப்பட்டுள்ளார். இந் நிலையில் கடல் இழுத்துச் சென்றவர்களை தேடும் பணிகள் நடைபெற்று வருகிறது.

சம்பவத்தில் காணாமல் போனவர்கள் பருத்தித்துறையைச் சேர்ந்த தர்சன் மற்றும் செந்தூரன் எனவும் உயிர் தப்பியவர் ஜெரோம் என்றும் தெரியவந்துள்ளது.

குறித்த பள்ளிமுனை கடல் பகுதியில் சுமார் ஐந்திற்கும் மேற்பட்ட ஆற்று நீரோட்டங்கள் இருப்பதாகவும் இதில் ஏதாவது ஒரு நீரோட்டத்தில் இந்த சம்பவம் நிகழ்ந்திருக்கும் என்று மன்னார் கடற்தொழில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# விபசார விடுதி சுற்றிவளைப்பு

## இருவர் கைது

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட் ஏத்துகால பகுதியில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் நடத்திச்செல்லப்பட்ட விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு பொலிஸாரால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பின்போது, விடுதியின் முகாமையாளரான பெண் மற்றும் விபசாரத்தில் ஈடுபடுவதற்காக அங்கு தங்கியிருந்த மற்றுமொரு பெண் ஆகியோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரண்டு பெண்களும் கண்டி பகுதியை சேர்ந்த 23 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களான இரண்டு பெண்களையும் விசாரணையின் பின் நீர்கொழும்பு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# சகல அஞ்சல் திணைக்களத்தினர் 32 மணிநேர பணிப்புறக்கணிப்பில்

அஞ்சல் திணைக்களத்தின் சகல தொழிற்சங்கங்களும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் 32 மணிநேர அடையாள பணிப்புறக்கணிப்பை ஆரம்பித்தனர்.

நேற்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் இன்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு வரை இந்த அடையாள பணிப்புறக்கணிப்பு தொடரும் என அஞ்சல் மற்றும் மின்சார கட்டமைப்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சாந்த குமார மீகம தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக அஞ்சல் திணைக்கள சேவையில் பாரிய குறைபாடுகளுள்ள போதிலும் அவை இன்னும் தீர்க்கப்படாதுள்ளன.

2006 ஆம் ஆண்டு சுற்று நிருபத்தின் படி சேவை முரண்பாடு பாரியளவில் உள்ளது. திணைக்களத்தின் சில பணிகள் வேறு திணைக்களத்திற்கு மாற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே,இவ்வாறான பல பிரச்சினைகளுக்கான தீர்வினை கோரியே குறித்த அடையாள பணிப்புறக்கணிப்பு இடம்பெறவுள்ளதாக அஞ்சல் மற்றும் மின்சார கட்டமைப்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் சாந்த குமார மீகம குறிப்பிட்டுள்ளார்.

# தகவல் அறியும் சட்டத்தை செயலிழக்க செய்ய அரசு முயற்சி

## -குற்றம் சுமத்தும் மைத்திரிபால-



தகவல் அறியும் சட்டத்தை செயலிழக்கச் செய்ய அரசாங்கம் முயற்சிப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்.

கேகாலையில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் இதனை தெரிவித்தார்.

தகவல் அறியும் சட்டத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துவது கவலையளிக்கின்றது. கூட்டணியொன்றை முன்னெடுத்து

செல்லும் பொறுப்பு அதனை ஏற்படுத்தியவர்களிடமே உள்ளது.

அதனை சரிவர நிறைவேற்றாத பட்சத்தில் கூட்டணி பிளவுப்படுவதற்கான வாய்ப்புள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# சுவர் இடிந்து வீழ்ந்ததில் இராணுவ சிப்பாய் பலி

தியத்தலாவை இராணுவக் கல்லூரியின் விஞ்ஞான பீட கட்டடத்தின் சுவர் இடிந்து வீழ்ந்ததில் இராணுவ சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார். குறித்த கட்டடத்தின் சுவரை இடிக்க முயன்றபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான இராணுவ சிப்பாய், பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மடுல்சிமை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடையவரே உயிரிழந்தவர் ஆவர். சடலம் பிரேத பரிசோதனைக்காக பதுளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தியத்தலாவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 50 அடி பள்ளத்தில் பாய்ந்து முச்சக்கரவண்டி விபத்து



பம்பரகல தோட்டத்திலுள்ள வீடொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு நோட்டன்பிரிட்ஜ் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி பள்ளத்தில் வீழ்ந்ததில் இருவர் படுகாயமடைந்த நிலையில் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முச்சக்கரவண்டி பிரதான வீதியில் இருந்து சுமார் 50 அடி தூரத்தில் கவிழ்ந்து அருகில் உள்ள வீட்டின் முற்றத்தில் நின்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் விபத்து இடம்பெற்ற போது முச்சக்கர வண்டியில் சாரதி உட்பட நால்வர் பயணித்துள்ளனர். விபத்தில் முச்சக்கரவண்டியின் சாரதியும் அதில் பயணித்த ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர்.நோட்டன்பிரிட்ஜ் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிசுவுக்கு எமனான வாழைப்பழத்துண்டு

வாழைப்பழத்துண்டு தொண்டையில் சிக்கி 11 மாத சிசு ஒன்று நேற்று முன்தினம் மாலை உயிரிழந்துள்ளது.

அஹங்கம- எத்துன்கெலே தோட்டத்தைச் சேர்ந்த ஆண் சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வாழைப் பழத்துண்டு சிக்கியதையடுத்து குறித்த சிசு, அஹங்கம கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்துள்ளது.

# ஜனாதிபதி கோட்டாபய சிங்கப்பூர் பயணமானார்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சிங்கப்பூர் நோக்கி பயணமாகியுள்ளார். தனிப்பட்ட விஜயமாக சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி சில நாட்கள் அங்கு மருத்துவ சிகிச்சைக்காக தங்கியிருக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் நேற்று பிற்பகல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதியின் பிரசன்னமின்றி நடைபெற்றது.

# 20 வருடங்களின் பின் பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வெற்றிகொண்ட இந்தியா



இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த, 21 வயதான ஹர்னாஸ் கவுர் சாந்து பிரபஞ்ச அழகிப் பட்டத்தை வென்றுள்ளார்.

இஸ்ரேலின் சுற்றுலாத்தளமான எய்லட் நகரில், பிரபஞ்ச அழகிக்கான போட்டி நடைபெற்றது. இதில், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சுமார் 80 அழகிகள் பங்கேற்றனர். இந்நிலையில், இந்தியா சார்பில் பங்கேற்ற இளம்பெண் ஹர்னாஸ் கவுர் பிரபஞ்ச அழகியாகத் தேர்வு செய்யப்பட்டார்.

அவருக்கு முன்னாள் பிரபஞ்ச அழகி மெக்சிக்கோவைச் சேர்ந்த ஆண்ட்ரியா மெசா கிரீடத்தினைச் சூட்டினார். சண்டிகார் நகரத்தைச் சேர்ந்த ஹர்னாஸ் கவுர் கடந்த 2017 -ம் ஆண்டு மிஸ் சண்டிகராக தேர்வு செய்யப்பட்டார்.

மேலும் பல்வேறு அழகிப் போட்டிகளில் பங்கேற்று பட்டங்களையும் வென்றுள்ளார்.

இந்தியாவின் சார்பில், லாரா தத்தா 2000-ம் ஆண்டில் உலக அழகிப் பட்டத்தை வென்றிருந்தார். அதன் பின்னர், 20 ஆண்டுகளிற்குப் பின்னர், இந்தியப் பெண்ணான ஹர்னாஸ் கவுர் சாந்து, பிரபஞ்ச அழகியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

# இந்தியாவில் ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையில் உயர்வு



இந்தியாவில் மேலும் 5 பேருக்கு, ஒமிக்ரோன் தொற்றுப் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள நிலையில், ஒமிக்ரோன் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளோரின் மொத்த எண்ணிக்கை 38 ஆக அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் இத்தாலியிலிருந்து சண்டிகருக்கு வந்த இளைஞர் ஒருவருக்கும், அயர்லாந்தில் இருந்து வருகை தந்த ஒருவருக்கும், ஒமிக்ரோன் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, அம்மாநிலங்களின் சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

அதேபோல், மகராஷ்டிரா, கேரளா, கர்நாடகா ஆகிய மாநிலங்களிலும், தலா ஒவ்வொருவருக்கு ஒமிக்ரோன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தியாவில் நேற்று முன்தினம் ஒரேநாளில், 3 ஆயிரத்து 632 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து, கொரோனாவினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே 46 இலட்சத்து, 94 ஆயிரத்து 142 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் 3 கோடியே 41 இலட்சத்து, 22 ஆயிரத்து 795 பேர் குணமடைந்து, வீடு திரும்பியுள்ளனர். அதேநேரம் 95 ஆயிரத்து 913 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கேரள மாநிலத்திற்குள்ளும் நுழைந்தது ஒமிக்ரோன்

-முதலாவது தொற்று நோயாளி பதிவு-




கேரளாவில் முதலாவது ஒமிக்ரோன் தொற்று, உறுதியானதைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட நபரின் மனைவி மற்றும் தாயார் ஆகியோருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவில் ஒமிக்ரோன் வைரஸ் பாதிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால், அதனைத் தடுக்கும் நடவடிக்கையில், மத்திய சுகாதாரத் துறை ஈடுபட்டுள்ளது.

டெல்டா வகை கொரோனா மற்றும் ஒமைக்ரோன் வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கையாக, 2 டோஸ் தடுப்பூசி செலுத்தியவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும் வகையில், பூஸ்டர் டோஸ் தடுப்பூசி செலுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உருமாறிய ஒமிக்ரோன் கொரோனா வைரஸ் வகையானது, உலக நாடுகளில் பரவி வருகிறது. அந்த வகையில் இந்தியாவில் கர்நாடகா, மகாராஷ்டிரா, ஆந்திரா உட்பட சில மாநிலங்களில், ஒமிக்ரோன் தொற்றுப் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், தமிழகத்தின் அயல் மாநிலமான கேரளாவில், முதலாவது ஒமிக்ரோன்; தொற்றுப் பதிவாகியுள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. தற்போது

ஒமிக்ரோன் தொற்று உறுதியாகியுள்ள நபருடன் தொடர்பில் இருந்தவர்களைக் கண்காணித்து வருவதாகவும், கேரள சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

# மறைமுகமான போரிலும் இந்தியாவே வெற்றிபெறும்

-அமைச்சர் ராஜ்நாத்சிங் -



பாகிஸ்தான் முன்னெடுத்து வரும் மறைமுகமான போரிலும், இந்தியா வெற்றி பெறுமென, பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

கடந்த 1971 ஆம் ஆண்டு பாகிஸ்தானுடன் இடம்பெற்ற போரில், இந்தியா வெற்றிப் பெற்றிருந்தது.இந்தப் போர் நினைவு நாளின் பொன்விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு, கருத்து வெளியிடும் போதே, அவர், இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், பாகிஸ்தானுடனான நேரடிப் போரில் இந்தியா வெற்றி பெற்றது. இதேபோல,மறைமுகப் போரிலும், இந்தியா வெற்றிப்பெறுமென உறுதியளிக்கின்றேன்.

வரலாற்றில், இந்தியாவிற்குள் அத்துமீறி ஊடுருவியவர்களின் பெயர்களையே, தங்களது ஏவுகணைகளுக்கு பாகிஸ்தான் சூட்டி வருகின்றது. இது இந்தியாவிற்கு எதிரான விரோதப் போக்கினை, அந்நாடு தீவிரமாக வளர்த்து வருவதை, வெளிக்காட்டுவதாகவும், அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்தியா ஹிந்துக்களின் நாடு ஹிந்துத்வவாதிகளின் நாடல்ல

-ராகுல் காந்தி -

இந்தியா ஹிந்துக்களின் நாடு, ஆனால், ஹிந்துத்வவாதிகளின் நாடல்லவென, அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.அதிகரித்து வரும் பணவீக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஜெய்ப்பூரில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதன்போது தொடர்ந்து தெரிவித்த அவர், இந்திய அரசியலில் இன்று ஹிந்து மற்றும் ஹிந்துத்வவாதி என்ற இரண்டு உலகங்களுக்கு இடையே, போட்டியுள்ளது. நான் ஹிந்து. ஆனால் ஹிந்துத்வவாதி இல்லை. மஹாத்மா காந்தி ஹிந்து.

ஆனால், கோட்சே ஹிந்துத்வவாதி. இந்தியா ஹிந்துக்களின் நாடு. ஹிந்துத்வவாதிகளின் நாடல்ல எனவும் அவர் தெரிவித்துள்ளார்.


















# கணவரை இழந்து தவித்த பெண் தற்கொலை முயற்சி

-கடவுளாக வந்து காப்பாற்றிய பொலிஸ்காரர்-



சென்னை பெசன்ட் நகர் கடலில் குதித்து, தற்கொலைக்கு முயற்சித்த பெண்ணை, ரோந்துப் பணியிலிருந்த காவலர் ஒருவர் காப்பாற்றிய சம்பவம், அப்பகுதியில், பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எலியட்ஸ் கடற்கரையில் ராஜா எனும் காவலர், ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தார். அப்போது, பெண் ஒருவர் கடலில் இறங்கி, உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சி செய்ததைப் பார்த்ததார். உடனடியாகச் செயற்பட்ட அவர் கடலில் குதித்து, அப்பெண்ணை மீட்டு, கரைக்கு கொண்டு வந்தார். பின்னர், அப்பெண்ணை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்.

அங்கு அப்பெண்ணிடம் பொலிஸார் விசாரணை செய்தனர். இந்த விசாரணையில், அப்பெண் புரசைவாக்கத்தைச் சேர்ந்த மகேஸ்வரி, இவருடைய கணவர் இறந்து விட்டார். இந்நிலையில், பிள்ளைகளும் சரிவரக் கவனிக்காமல் கைவிட்டதனால்,தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளது தெரியவந்தது.கணவர் இறந்த தினத்தில், உயிரை மாய்த்துக் கொள்ள முற்பட்டதாகவும், மகேஸ்வரி பொலிஸாரிடம், கூறியுள்ளார். இதனையடுத்து, அப்பெண்ணின் மகனை வரவழைத்து, பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

# தெருநாய்கள் கடித்ததில் உயிருக்குப் போராடிய ஜீவன்

-மூச்சுக் காற்றுக் கொடுத்துக் காப்பாற்றிய சாரதி-

தமிழகத்தின் பெரம்பலூரில் தெருநாய்கள் கடித்ததில் உயிருக்குப் போராடிய குரங்கிற்கு, மூச்சுக்காற்று கொடுத்து, அதன் உயிரைக் காப்பாற்றியுள்ள பிரபு என்பவருக்கு, பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

ஒதியம் கிராமத்தில் கடந்த 9 ஆம் திகதி, குரங்கு ஒன்று, தனது குட்டியுடன் சுற்றித் திரிந்துள்ளது. இதனைக் கண்ட தெருநாய்கள், குரங்கை துரத்திச் சென்றன. ஒரு கட்டத்தில் கும்பலாகச் சேர்ந்த நாய்கள், குரங்கை சரமாரியாகக் கடித்தன.இதில், தலை மற்றும் உடல் பகுதியில் பலத்த காயமடைந்த குரங்கு, ஒரு கட்டத்தில் அருகிலிருந்த மரத்தின் மீது ஏறித் தப்பியது. இதனை அவ்வழியாக சென்ற கார் சாரதியான பிரபு என்பவர் பார்த்து, குரங்கினை பத்திரமாக கீழே இறக்கிய போது,சிறிது நேரத்தில் மயங்கி வீழ்ந்து விட்டது. இதனால், அதிர்ச்சியடைந்த பிரபு, குரங்கினை தனது மடியில் அமர்த்தியவாறு, அதன் மார்புப் பகுதியில் அழுத்தினார்.அப்போது, குரங்கிடம் அசைவு இல்லாததால், குரங்கின் வாயோடு வாய் வைத்து, வாயினால் ஊதி மூச்சுக்காற்று கொடுத்து, அதன் உயிரைக் காப்பாற்றினார்.பின்னர், இந்தக் குரங்கினை எடுத்துச்சென்று கால்நடை மருத்துவமனையில் மருத்துவர்களிடம் நடந்தவற்றை எடுத்துக்கூறினார். உடனடியாக குரங்கிற்கு சிகிச்சை யளித்த மருத்துவர்கள், குணமடைந்த பின்னர், அதனை வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். கார் சாரதியான பிரபுவின் இந்த மனிதாபிமானச் செயலினால்,குரங்கின் உயிர் காப்பாற்றப்பட்டமை குறித்து, பலரும் மகிழ்ச்சி தெரிவித்து அவரைப் பாராட்டினர்.


சிறு தினக்குரல் விளம்பரங்கள்

**மணமகன் தேவை**

1994, யாழிந்து விஸ்வகுலம், ஹஸ்தம், Teacher, யாழ்ப்பாணம், பதிவு # 6650, புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd. 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04

**மணமகன் தேவை**

1989, யாழ். கிறிஸ்தவ வேளாளர், Development Officer, யாழ்ப்பாணம் பதிவு # 6555, புதன்கிழமை, 15 Dec 2021 வரையான பதிவுக்கு 20% விலைக்கழிவு மற்றும் திருமணம் சரிவரும் போது தரகர்கூலி இல்லை. Appointments 076 6649401. www.EQMarriageService.com, Ensured Quality Lanka Pvt Ltd. 91-4/2, Galle Road, Bambalapity, Colombo-04

# உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவிற்கு உலக நாடுகள் எச்சரிக்கை



கடந்த சில நாட்களாக ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளுக்கு இடையிலான விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ள நிலையில், ரஷ்யாவிற்கு உலக நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக வெளியாகியுள்ள தகவல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமிப்பு செய்யவுள்ளதாக வெளிவந்திருக்கும் தகவலின் அடிப்படையில், அமெரிக்கா உட்பட அனைத்து நாடுகளும், அதிர்ச்சியடைந்துள்ளன.

உக்ரைன் நாட்டைக் கைப்பற்றுவதற்கு, ரஷ்யா முயற்சித்தால், கடும் பின்விளைவுகளை சந்திக்க நேரிடுமென, அமெரிக்க ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஜி7 கூட்டமைப்பு நாடுகளும் ரஷ்யாவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

உக்ரைனை முழுமையாகக் கைப்பற்றுவதற்காக, அதன் எல்லைப் பகுதியில் இலட்சக்கணக்கான இராணுவ வீரர்களை ரஷ்யா குவித்து வைத்துள்ளது, இரு நாடுகளுக்கும் இடையிலான பதற்றத்தினை மேலும் அதிகரித்துள்ளது.

## தென்னாபிரிக்க ஜனாதிபதிக்கு கோவிட் தொற்று உறுதி



தென்னாபிரிக்க ஜனாதிபதி சிரில் ரமபோசா, கொரோனா வைரஸ் (கொவிட்-19) தொற்றினால்,பாதிக்கப்பட்டுள்ளதாக, அந்த நாட்டின் ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றினால், நேர்மறை சோதனை செய்த ஜனாதிபதி சிரில் ரமபோசா, தற்போது சிகிச்சை பெற்று வருகிறார். அவர் கேப்டவுனில் சுயமாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளாரெனவும், தென்னாபிரிக்க இராணுவ சுகாதார சேவையினால், கண்காணிக்கப்பட்டு வருகிறாரென, ஜனாதிபதி அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே அடுத்த வாரத்திற்கான, அனைத்துப் பொறுப்புகளையும் துணை ஜனாதிபதி டேவிட் மபுசாவிடம், அவர் ஒப்படைத்துள்ளார். 69 வயதான ரமபோசா, முழுமையாக தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளார். ஆனால் அவர், ஓமிக்ரோன் கொரோனா வைரஸ் மாறுபாட்டினால் பாதிக்கப்பட்டாரா என்று, அந்த அறிக்கையில் கூறப்படவில்லை.

## ஜூலியன் அசாஞ்சே பக்கவாத நோயினால் பாதிப்பு

### -காதலி வெளியிட்ட டுவிட்டர் பதிவு-

லண்டனிலுள்ள பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜூலியன் அசாஞ்சே பக்கவாத நோயினால், பாதிக்கப்பட்டுள்ளதாக அவரது காதலி ஸ்டெல்லா மோரிஸ் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவின் இராணுவ இரகசியங்களை விக்கி லீக்ஸ் இணையதளத்தில் வெளியிட்டு, உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்திய ஜூலியன் அசாஞ்சே, தற்போது இங்கிலாந்து தலைநகர் லண்டனிலுள்ள, பெல்மார்ஷ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.அவரை அமெரிக்காவிற்கு நாடு கடத்துவதற்கு தடை விதித்து, லண்டன் நீதிமன்றம் கடந்த ஜனவரி மாதம் வழங்கிய தீர்ப்பை, இங்கிலாந்து மேல்முறையீட்டு நீதிமன்றம் கடந்த சில தினங்களுக்கு முன்புஇரத்துச் செய்தது.

எனவே,அவரை அமெரிக்காவிற்கு நாடு கடத்துவதற்கான கதவுகள் திறந்துள்ளன. இது குறித்து இங்கிலாந்து அரசாங்கமே முடிவெடுக்கும். ஆனால்,அசாஞ்சேவின் ஆதரவாளர்கள் அவரை, அமெரிக்காவிற்கு நாடு கடத்துவதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இதுகுறித்து அவரது காதலி டுவிட்டரில் வெளியிட்டுள்ள பதிவில் 'கடந்த ஒக்ரோபர் மாதம் 27-ஆம் திகதி நடந்த நீதிமன்ற விசாரணைக்கு அசாஞ்சே காணொளிக் காட்சி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டபோது அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டது. தற்போதும் அவருக்கு, நோய்ப் பாதிப்பு உள்ளது. எனவே, அவரை உடனடியாக விடுவிக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

## உலகில் முதலாவது காகிதம் இல்லாத அரசாங்கமாக மாறியது டுபாய்



உலகிலேயே 100 சதவீதம் காகிதம் இல்லாத அரசாங்கமாக, டுபாய் மாறியுள்ளதாக எமிரேட்ஸ் பட்டத்து இளவரசர் அறிவித்துள்ளார்.

டுபாயில் கடந்த 2018-ஆம் ஆண்டு முதல், காகிதமில்லா டிஜிட்டல் நகரமாக மாற்றும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தை 5 கட்டங்களாகப் பிரித்து பட்டியலிடப்பட்டன.

இதன் 5-ஆவது கட்டத்தின் முடிவில், டுபாயில் 45 அரசுத் துறைகளும் காகிதமற்றவையாக மாற்றப்பட்டன. இதன் மூலம், உலகின் முதல் காகிதமில்லாத அரசு என்ற பெருமையை, டுபாய் பெற்றுள்ளது. இந்தத் துறைகள் 1,800இற்கும் மேற்பட்ட டிஜிட்டல் சேவைகள் மற்றும் 10,500இற்கும் மேற்பட்ட முக்கிய பரிவர்த்தனைகளை வழங்குகின்றன.

இதுகுறித்து, எமிரேட்ஸ் பட்டத்து இளவரசர் ஷேக் ஹம்தான் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தச் சாதனை புதுமை, படைப்பாற்றல் மற்றும் எதிர்காலத்தில் கவனம் செலுத்தும் பயணமாகும். இது டுபாயின் உலக முன்னணி டிஜிட்டல் மூலதனம் மற்றும் வாடிக்கையாளர்களின் மகிழ்ச்சியை மேம்படுத்தும் எனவும், அரசாங்க செயற்பாடுகள் மற்றும் சேவைகளை வடிவமைப்பதில், இது ஒரு முன்மாதிரியாக அதன் நிலையை வலுப்படுத்துகின்றது.

இத்திட்டத்தின் மூலம், டுபாய் அரசாங்கத்திற்கு 2650 கோடி ரூபா (350 மில்லியன் அமெரிக்க டொலர்) சேமிக்கப்படுவதுடன், 14 மில்லியனுக்கும் அதிகமான, மனித வேலை நேரமும் மிகுதியாவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தலிபான்களின் பிடியிலுள்ள ஆப்கான் மக்களுக்கு மனிதாபிமான ரீதியில் கரம் கொடுத்த இந்தியா



ஆப்கானிஸ்தானில், தலிபான்கள் ஆட்சியமைத்த பின்னர், ஆப்கானிஸ்தானில் நிலவி வரும் சுகாதார நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு, இந்தியா மனிதாபிமான அடிப்படையில், அந்நாட்டிற்கு முதற் கட்ட மருத்துவத்துறை உதவிகளை அனுப்பியுள்ளது.

இதன் மூலம், அஷ்ரப் கனியின் ஆட்சி கவிழ்ப்பிற்குப் பின்னர், ஆப்கானிஸ்தானுக்கு முதலாவது மருத்துவ உதவியை இந்தியா வழங்கியுள்ளது.டெல்லியிலிருந்து நேரடியாக காபூலுக்கு புறப்பட்ட 'காம் எயார் என்ற ஆப்கன் விமானம் மூலம் 1.6 மெட்ரிக் தொன் மருத்துவ உதவிப் பொருட்களை, இந்தியா தலிபான் ஆட்சியிலுள்ள ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பியுள்ளது.

இந்தியாவிடமிருந்து கிடைத்துள்ள மருத்துவ உதவிக்கு, ஆப்கானிஸ்தான் நன்றி தெரிவித்துள்ளது. ஆனால், வருங்காலத்தில் சுகாதாரம் தொடர்பான நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு, மேலும் உதவிகள் தேவையென, அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.


இந்தியா செய்த இந்த உதவி, மனிதாபிமான அடிப்படையிலானதே. ஆனால், தலிபான்களின் ஆட்சியை, இந்தியா எந்தவகையிலும் அங்கீகரிக்கவில்லை. உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதிகள் மூலம், இந்தியா ஆப்கானிஸ்தானில் உள்ள மருத்துவமனைக்கு உதவி செய்தது.

மனிதாபிமான அடிப்படையில் வழங்கிய உதவிப் பொருட்கள் அடங்கிய பெட்டிகளில், 'இந்திய மக்களிடமிருந்து ஆப்கானிஸ்தான் மக்களுக்கான பரிசு' என்ற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருந்தது.

கடந்த சனிக்கிழமை அனுப்பப்பட்ட உதவியின் மூலம், தலிபான்கள் ஆட்சி செய்யும் ஆப்கானிஸ்தானுக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்பிய ஈரான், கட்டார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ்,துர்க்மெனிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் பட்டியலில், இந்தியாவும் இணைந்துள்ளது.

# விண்வெளிக்குச் சுற்றுலா சென்று திரும்பிய 74 வயது மூதாட்டி





விண்வெளிக்கு சுற்றுலா சென்றுவிட்டு பூமிக்கு வெற்றிகரமாகத் திரும்பி 74 வயதான மூதாட்டியொருவர் சாதனை படைத்திருக்கிறார்.

அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரரான ஆலன் ஷெப்பர்ட்டின் மகளான, 74 வயதான லாரா ஷெப்பர்ட் எனும் மூதாட்டி உள்ளிட்ட 6 பேரைக் கொண்ட குழுவினர், புளூ ஆரிஜின் நிறுவனத்தின் மூலம், விண்வெளிக்கு சுற்றுலா சென்றுவிட்டு, வெற்றிகரமாகத் திரும்பியுள்ளனர். உலகின் முன்னணி இணைய வர்த்தக நிறுவனமான, அமேசான் நிறுவனத்தின் நிறுவனரான ஜெப் பெசோஸ், புளூ ஆரிஜின் என்ற பெயரில், விண்வெளி நிறுவனத்தை நடத்தி வருகிறார். மனிதர்களை விண்வெளிக்கு அழைத்துச் செல்வதை நோக்கமாக கொண்டு, இந்த நிறுவனம் இயங்கி வருகின்றது. அந்த வகையில், கடந்த ஜூலை மாதம் தனது நிறுவனத்தின் தயாரிப்பான நியூ ஷெப்பர்ட் விண்கலத்தின் மூலம், ஜெப் பெசோஸ் விண்வெளிக்குச் சென்று வந்தார். இது மிகப்பெரிய சாதனையாகப் பார்க்கப்பட்டது. இந்த நிலையிலேயே ஆறு பேர் கொண்ட இந்தக் குழுவினர் புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளனர்.

லாரா ஷெப்பர்ட்டின் தந்தையான ஆலன் ஷெப்பர்ட,கடந்த 1961-ம் ஆண்டு மே 05ஆம் திகதி புளொரிடாவிலிருந்து, மெர்குரி விண்கலத்தில் விண்வெளிக்குப் பயணித்து, அமெரிக்காவின் முதல் விண்வெளி வீரர் எனும் பெருமையைப் பெற்றார்.

டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள புளூ ஆரிஜின் நிறுவனத்துக்கு சொந்தமான வான் ஹார்ன் ஏவுதளத்தில் இருந்து ஆலன் ஷெப்பர்ட் உள்ளிட்ட 6 பேருடன் நியூ ஷெப்பர்ட் விண்கலம் விண்ணுக்குப் புறப்பட்டது. இந்தப் பயணம் சுமார் 10 நிமிடங்களுக்கு நீடித்தது. நியூ ஷெப்பர்ட் விண்கலம் 100 கிலோமீற்றர் உயரம் வரை பயணித்து, மீண்டும் பத்திரமாக பூமியில் தரையிறங்கியுள்ளது.

## மிகுந்த சிரமத்தின் மத்தியில் 250 கிலோ நிறையுள்ள பன்றியை வளர்க்கும் பெண்மணி



பிரேஸிலில் பெண்ணொருவர் தனது வீட்டில், 250 கிலோ எடையுள்ள பன்றியை, வளர்த்து வருகிறார். தற்போது லிலிகா எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பன்றிக்கு, 3 வயது ஆகின்றது. மேலும் இந்தப் பன்றியானது, ஒரு நாளைக்கு, சுமார் 5 கிலோ பழங்கள், காய்கறிகள் மற்றும் பிற உணவுகளை உண்பதாக,இதனை வளர்க்கும் ரோசங்கெலா கூறுகிறார். குறித்த பன்றியை சிறிய இனம் என நினைத்துத்தான் வாங்கியதாகவும், இதனை வளர்க்கும் தினசரிச் செலவு அதிகமாக இருந்ததாலும், பன்றி மீது தனக்கு மிகுந்த அன்பு இருப்பதனால், அதனை இன்னும் விற்பதற்குத் தயாராகவில்லை என்றும் ரோசங்கலா கூறியுள்ளார்.

## கோவிட் தொற்றினால் மீண்டும் மூடப்படும் பாடசாலைகள்? பிரித்தானியாவின் சுகாதாரச் செயலாளர் வெளியிட்ட தகவல்

பிரித்தானியாவில் பாடசாலைகள் தொடர்ந்து திறந்திருக்கும் என்பதற்கு உத்தரவாதம் இல்லையென, அந்த நாட்டின் சுகாதாரச் செயலாளர் சஜித் ஜாவித் தெரிவித்துள்ளார்.

பிரித்தானியாவில் கோவிட் தொற்று அதிவேகமாகப் பரவி வருவதனால், மீண்டும் பாடசாலைகளை முடுவதற்கு சாத்தியம் இருக்கின்றதா என்பது குறித்து, சுகாதாரச் செயலாளர் சஜித் ஜாவித் தெளிவுபடுத்தியுள்ளார்.

இது போன்ற நடவடிக்கைகளை தான் விரும்பவில்லையெனவும், குறிப்பாக பூஸ்டர் தடுப்பூசித் திட்டம் போன்ற ஏனைய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்போவதாகவும், அவர் கூறியுள்ளார். பிரித்தானியாவில் மீண்டும் பாடசாலைகள் மூடப்படாது என்பதற்கு, உத்தரவாதம் கேட்டால், கொரோனா தொற்றினைக் கட்டுப்படுத்தும் விடயத்தில், எந்தவிதமான உத்தரவாதத்தினையும் வழங்க முடியாதெனவும், அவர் கூறினார்.ஆனால், இந்த விடயத்தில், தடுப்பூசியின் பூஸ்டர் டோஸ் வேலை செய்கின்றது என்பது எங்களுக்குத் தெரியுமெனா, சஜித் ஜாவித் கூறியுள்ளார்.பாடசாலைகளை தொடர்ந்து இயங்க வைப்பதே தங்களின் முன்னுரிமைகளில் ஒன்றெனா பிரித்தானியா அரசாங்கம் தொடர்ந்து கூறிவருவது, குறிப்பிடத்தக்கது.

# வெறும் 24 மணி நேரத்தில் 10 டோஸ் தடுப்பூசி பெற்றுக் கொண்ட நபர்

### -நியூஸிலாந்து நாட்டில் பெரும் பரபரப்பு-

நியூசிலாந்தில் ஒருவர் வெறும் 24 மணி நேரத்தில், 10 டோஸ் கொரோனா தடுப்பூசிகளை எடுத்துக்கொண்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் தகவல் வெளியாகியதைத் தொடர்ந்து, நியூசிலாந்து சுகாதார அமைச்சகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. குறிப்பிட்ட இந்த நபர், ஒரு நாளில் பல தடுப்பூசி மையங்களுக்குச் சென்று, 10 தடுப்பூசிகளைப் போட்டுக் கொண்டுள்ளார். இதற்கு அவர் வெவ்வேறு நபர்களின் அடையாள அட்டைகளை பயன்படுத்தியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. இதுகுறித்து DW.com தளத்தில் வெளியான அறிக்கையில், கோவிட் -19 தடுப்பூசி மற்றும் நோய்த்தடுப்பு திட்டத்தின் குழு மேலாளர் ஆஸ்ட்ரிட் கோர்னிஃப், 'இது குறித்து அமைச்சகத்திற்கு தகவல் கிடைத்துள்ளது. இதற்கமைய'நாங்கள் இந்த விடயத்தை மிகவும் தீவிரமாக எடுத்துக்கொள்கிறோம். ஏனெனில், பல தடுப்பூசிகளை எடுத்துக்கொள்வதனால், அவருக்கு ஆபத்துகள் ஏற்படலாம். எனவே அவரைப் பற்றி உங்களுக்குத் தெரிந்தால், உடனடியாக அறிவிக்கவும். இந்த விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்துமாறும், அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது'

இதனைத் தொடர்ந்து ஒக்லாந்து பல்கலைக்கழக தடுப்பூசி நிபுணர் ஹெலன் பெடோமிஸ்-ஹாரிஸ் இது குறித்து தெரிவிக்கும் போது 'இதுபோன்ற ஏராளமான தடுப்பூசிகளை எடுத்துக்கொள்வதால் ஏற்படும் விளைவுகள் குறித்த தரவுகள் எதுவும் தற்போது இல்லை. அதனால், ஒரு நாளைக்கு 10 டோஸ்களை எடுத்துக் கொள்ளும் ஒருவருக்கு, என்ன பாதிப்பு ஏற்படும் எனச் சொல்வது மிகவும் கடினம். ஆனால், அவ்வாறு எடுத்துக் கொள்வது நிச்சயம் பாதுகாப்பானது அல்ல' என்றார். மேலும் கொரோனா தொற்றிற்காக, ஒருவர் இவ்வளவு டோஸ் எடுத்துக்கொண்ட முதலாவது சந்தர்ப்பம், இதுவென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 267 ஆம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.